வில ரூபா 1-25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 29 ஆனி 24 துல்ஹஜ்ஜா 11 இதழ் 137

யாழ்ப்பாணம் புதன்கிழமை 8-7-1987

முகாம்களிலிருந்து வெளியேறிய

## படையினருடன் நேரடிச் சமர்

## 7 ராணுவம் பலி! பலர் காயம்!

யாழ்ப்பாணம், புதன் யாக்கரை, முள்ளி இராணுவ முகாம்களிலிருந்து வெளியேறிய படையினரை எதிர்த்து விடுதலைப் புலிகள் மேற்கொண்ட பாரிய தாக்குதலில் 7 ராணுவத்தினர் பலியானுர்கள். மேலும் பலர் படுகாயமடைந்தனர்.

இவ்வாறு விடுதலைப் புலிகள் விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவிச்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;-

யாக்கரை, முள்ளி ஆகிய முகாம்களிலிருந்து பெருமளவில் முன்னேற முயன்ற இராணுவத்தினரை எம்மவர்கள்

### புலிகள் அறிவிப்பு

கலிகைச் சந்தி என்ற இடத்தில் வைத்து எதிர்த் தாக்குதல் நடத்தினர். சுமார் 4 மணித்தியாலமாகத் தொடர்ந்த இம் மோதலில் 7 ராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் பலர் படுகாயமடைந்தனர்.

# இந்திய நிவாரணப் பொருள்கள் இனிமேல் கொழும்பில் இறக்கப்பட வேண்டும்

### பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் வலியுறுத்து

[கொழும்பு]

"வடபகுதி மக்களுக்கு விநியோகிக்கவென இந்தியாவிலிருந்து காங்கேசன்துறை துறைமுகத்திற்கு அனுப்பப்பட்டுவரும் இந்திய நிவாரணப் பொருள்கள் இனிமேல் கொழுப்புத்துறைமுகத்தில் இறக்குவதற்கான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளப்படவேண்டும்''.

இவ்வாறு நேற்று கொழும்பில் நடைபெற்ற அரசாங்க பாராளுமன்றக்குழுக் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

மேற்படிகூட்டம் ஜனுதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் பிரதமர் திரு. பிரேமதாஸா உரையாற்றுகையில் 'தொடர்ந்து இந்தியா யாழ்ப்பாண

[5ம் பக்கம் பார்க்க]

● ராஜீவின் கடிதம் தொடர்பாக

# ஜனுதிபதி, அமைச்சர்களுடன் இன்று ஆலோசனை நடத்துவார்

(நமது நிருபர்)

**இலங்கை இனப்பிரச்னை தொடர்பாக இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அண்மையில் தமக்கு அனுப்பவைத்து்ா கடிதம் குறித்தும் அக்கடிதத்திற்கு இலங்கை அரசு அனு ப்பிவைக்கவுள்ள தில் குறித்தும் ஜனுதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன இன்று தமது அமைச்சர்களுடன் ஆலோசனை நடத்தவுள்ளார்.**

திரு. ராஜீவ் காந்தியின் கடிதம் கடந்த புதன்கிழமையன்று இலங்கையிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகர் திரு. ஜே. என் டிக்ஸிற் மூலம் திரு. ஜே.ஆர். ஜயவர்த்தனவிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்தக் கடிதத்தில் புதிய யோசனைகள் சில அடங்கியிருப்பதாகக் கூறப்பட்டபோதிலும் இந்திய ஸ்தானிகராலயம் அதை மறுத்துள்ளது.

டிசம்பர் 19ம் திகதிய யோசனைகளில் மேலும் முன்னேற்றகரமான மாற்றங்களைச் செய்யும்படி இந்திய அரசு வலியுறுத்தி

(5ம் பக்கம் பார்க்க)

நெல்லியடி முகாம் தாக்குதல்:

## இந்திய உயர்ஸ்தானிகரிடம் பாதுகாப்பமைச்சு முறையீடு

(கொழும்பு)

நெல்லியடி இராணுவ மினி முகாம் விடுதலைப் புலிகளினுல் தகர்க்கப்பட்டது தொடர்பாக சம்பவம் நடைபெற்று சிலமணிநேரங்களுள் இலங்கை பாதுகாப்பு அமைச்சு உயரதிகாரிகள் இந்திய உயர் ஸ்தானிகர் திரு. ஜே என் டிக்ஸிற்றிடம் முறையீடு செய்துளளனர்.

(5ம் பக்கம் பார்க்க)

## புலிகள் - ராணுவம் தொடர்ந்து மோதல்

யாழ்ப்பாணம், புதன்

நெல்லியடியில் விடுதலைப் புலிகளுக்கும், இராணுவத்தினருக்குமிடையிலான மோதல்கள் நேற்றும் தொடர்ந்து இடம்பெற்றன. (கு)

## வடமராட்சி மக்களுக்கு நிவாரண உதவி நீடிப்பு

### வீடுகளை திருத்த நிதிஉதவி

[கொழும்பு]

வடமராட்சிப்பகுதியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மேலும் ஒரு மாதத்திற்கு உணவு நிவாரணம் வழங்க புனர்வாழ்வு அமைச்சு தீர்மானித்துள்ளதாக அறியப்படுகின்றது.

இதேவேளை வடமராட்சிப் பகுதயில் சேதமடைந்தவீடுகளைத் திருத்தியமைக்க மூவாயிரம் ரூபா நிதியுதவியை புனர்வாழ்வு அமைச்சு வழங்கவுள்ளதாம். அத்துடன் அரச சார்பற்ற தொண்டர் ஸ்தா

(5ம் பக்கம் பார்க்க)

கஷ்டப்பிரதேச பாடசாலைகளுக்கு

## 2500 ஆசிரியர்கள் நியமனம்

[கொழும்பு]

நாட்டின் கஷ்டப் பிரதேசப் பாடசாலைகளுக்கு 2,500 கலை, விஞ்ஞான ஆசிரியர்கள் நியமிக்கப்படவுள்ளனர். எதிர்வரும் செப்டம்பர் மாதம் முதல் இந்த நியமனம் வழங்கப்படவுள்ளது.

இவ்வாறு நியமனம்பெறும் ஆசிரியர்கள் கஷ்டப் பிரதேச சேவைக்குச் செல்லுமுன் மூன்று வாரப் பயிற்சிவகுப்பில் கலந்துகொள்வார்களென்றும், வகுப்புகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

தமது கஷ்டப் பிரதேசப் பாடசாலைச் சேவையை முடித்துக்கொண்டு இடமாற்றம் பெறவுள்ள 2,500 ஆசிரியர்

[5ம் பக்கம் பார்க்க]

## படையினரின் தாக்குதலில் படுகாயமடைந்திருந்த அதிபர் சிவராசா நேற்று காலமானுர்



யாழ்ப்பாணம், புதன்

மாவிட்டபுரம் இராணுவத்தினரின் தாக்குதலுக்கு இலக்காகி படுகாயமடைந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த வீமன்காமம் மகாவித்தியாலய அதிபர் திரு எம் சிவராசா ஆஸ்பத்திரியில் நேற்று காலமானுர்

இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலுள்ள வீமன்காமம் மகாவித்தியாலத்தின் மாணவர்கள், ஆசிரியர்களின் முக்கிய தஸ்தாவேஜுக்களை எடுத்துவரும் பொருட்டு கடந்த 3-ம் திகதி காலை வெள்ளைக்

(5ம் பக்கம் பார்க்க)

அரசின் போக்கை கண்டித்து

## வேலைநிறுத்தப் மறியல்செய்ய 20 தொழிற்சங்கங்கள் முடிவு

(கொழும்பு)

நாட்டில் மோசமடைந்துவரும் நிலைமைகளுக்கு அரசாங்கமே காரணமென்றுஇவற்றை தீர்க்கஅரசு தவறிவிட்டதென்றும் குற்றம்சாட்டி தொழிற்சங்கங்கள்இம்மாதம்30ம் திகதி வேலைநிறுத்தமறியல் போராட்டத்தில் குதிக்கவுள்ளன.

இலங்கையின்சகல பகுதிகளிலும் உள்ள பொதுத்துறை, தனியார்துறைதொழிற்சங்கங்கள் இந்தவேலைநிறுத்த, மறியல் போராட்டங்களில் ஈடுபடுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்மாதம் 30ம் திகதி நடைபெறும் இப் போராட்டத்தில் 20 தொழிற்சங்கங்களைச் சேர்ந்த ஐந்துலட்சத்திற்கும் அதிக மானவர்கள் கலந்து கொள்வார்களென்றும் ஓர் தொழிற் சங்கத்தலைவர் தெரிவித்துள்ளார்.

சி]

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

Calbirds) இறைச்சிக்கோழி மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு சீமாட்டி பாம்ஸ், ஸ்ரேசன் ரேரூட், மயிலன்காடு,சுன்னுகம். சி-9705

பிரம்பு / சாதாரணகோல்செற்கள், பலவித அலுமாரிகள், கட்டில்கள், மேசைகள், Electric cooker with oven, Towel Rack, Book shelf, Ceiling fan, Easy chair, Mini Ice Cream Beater, Type writer, Water pump மற்றும் பல பொருள்கள் விற்பனைக் குண்டு பத்மநாதன், பிறிமல்டி சேவிஸ், திருநெல்வேலி வடக்கு. சி-9737

சொனி 2020, பிலிப்ஸ் 17'' 14'' ரியூப், ரியூனர், பிளேபாக், சகல நாஷனல் வீடியோ டெக்கிற்குரிய உதிரிப்பாகங்கள், ICக்கள் என்பன விற்பனைக்கு உண்டு. Jaffna Technical Institute, ஸ்ரான்லி வீதி, (றெயில்வே கடவையருகாமை), யாழ்ப்பாணம். சி-9716

Bairaha Farms Hisex பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் சேவற் குஞ்சுகள், Hybro புறேயிலர் குஞ்சுகள் 10ந் திகதி வெள்ளிக்கிழமை விநியோகிக்கப்படும் பதிவு செய்க சற்குணராஜா பிறதர்ஸ், பிரம்படி கொக்குவில். (சி 9687)

விற்பனையாகின்றது G C.E. (A/L) 87 தாவரவியல் (100 பல்தேர்வு வினுவிடை) குகாதரன் பாலா விலை ரூபா 5-00 9-7-87 நண்பகல் வெளிவருகின்றது விலங்கியல் (100 பல்தேர்வு வினுவிடை) S. P. நாகநாதன் விலை ரூபா 5-00. பூபாலசிங்கம் புத்தகசாலை உட்பட சகல முன்னணி புத்தக நிலையங்களிலும் விற்பனைக்குண்டு. பௌதிகவியல் வினுவிடை வெளியாகும் நாளை ஆவலுடன் எதிர்பாருங்கள். சி-9745

மூன்று மாதங்கள் கவனமாகப் பாவித்த புதிய 20'' கலர் TV Sony 2090, வாகனங்களுக்குரிய நஷனல் பனசோனிக்கசற் றேடியோ, சீலிங் Fan, பலவகை மெக்கானிக்கல் சாவிகள், 35 அறைகள் கொண்ட இரும்பு அலுமாரி விற்பனைக்குண்டு. சுவர்ணம்ஸ் றேட்ஸ் 44 K. K S. வீதி கொக்குவில். சி-9746

பிடவை சீமாட்டி 531' பலாலி றேட், திருநெல்வேலி' யாழ் பல்கலைக்கழக அருகாமையில் [சி9751]

பான்சி குட்ஸ் சீமாட்டி 158, நவீனசந்தை யாழ்ப்பாணம். [சி 9750]

## தவறிவிட்டது

பொன்னையா யோசேப்பு தம்பிரத்தினம் 123880630 V இலக்கமுடைய மேலே குறிப்பிட்ட அடையாளஅட்டை இம்மாதம் 6-ந் திகதி யாழ்ப்பாணத்துக்கும் இணுவிலுக்குமிடையில் Bus ல் பயணம் செய்யும்போது தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்க்குறிப்பிட்டுள்ள முகவரியில் ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும் Rogers Cottage Mcleod Hospital, Inuvil. சி-9748

## சேவை

தரமான போட்டோஸ்டெட் பிரதிகளுக்கு கி. வீ. போட்டோ, ஸ்டேசன் சந்தி, யாழ்ப்பாணம். சி-9597

## தேவை

யாழ்.றேமன் கத்தோலிக்க சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த சவூதியில் பணிபுரியும் 28 வயதுடைய தற்சமயம் 2 மாத லீவில் நிற்கும் மணமகனுக்கு பெண் தேவை. யாழ். இந்து வேளாள குலத்தைச் சேர்ந்த U K யில் வேலை செய்யும் மணமகளுக்கு U K யில் மணமகன் தேவை. தொடர்பு ABCDE விவாகப் பொருந்துனர் 91/16 இந்து மகளிர் ஒழுங்கை, கந்தர் மடம். சி-9743

## சேவை

யாழ். இந்து வேளாள குலத்தைச் சேர்ந்த வெளி நாட்டில் வேலை செய்யும் ஆண்களுக்கு அந்த நாட்டிலேயே மணப்பெண்கள் தேவை. ஜேர்மனி வயசு 33 செவ்வாய் 4 நட்சத்திரம் சித்திரை ஜேர்மனி வயது 30 செவ்வாய் 4 நட்சத்திரம் அத்தம் ஜேர்மனி வயசு 28 நட்சத்திரம் அத்தம் பிரான்ஸ் வயது 30 செவ்வாய் 1 நட்சத்திரம் அத்தம் தொடர்பு ABCDE விவாகப் பொருத்துநர் 91/16 இந்து மகளிர் ஒழுங்கை கந்தர்மடம். சி-9744

## வகுப்புக்கள்

108.Brown Rd, Jaffna A/L 88 சேதன இரசாயனம் ஆசிரியர் சத்தீஸ் ஆரம்பம் 8-7-87 புதன். 4-45 p m. (திங்கள், புதன்,4.45 P.m ) (சி 9700)

Radio-TV, Air conditioning, Refrigeration, வயறிங், பிளம்பிங், மோட்டமெக்கானிசம், வைன்டிங், தட்டெழுத்து-சுருக்கெழுத்து புதிய பிரிவுகள் செய்முறை பயிற்சியுடன் ஆரம்பமாகவுள்ளன. சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும் Vispa Engineering Aid Hall (ஆனைப்பந்திச் சந்திக்கு அருகாமையில்) 328, நாவலர்வீதி, யாழ்ப்பாணம். சி-9726

ஆகஸ்ட் 16ம் திகதி நடைபெறவிருக்கும் ஆசிரியர்தெரிவு போட்டிப் பரீட்சைக்கான 1 மாதகால துரிதபயிற்சிவகுப்புக்கள் ஆரம்பம்: 11-07-87 பாடநெறி, பொது அறிவும் பொதுஉளச்சார்பும் பல ஆசிரியர்களின் இணைந்த சேவை. கட்டணம் ரூபா 100/- மட்டுமே. தொடர்பு: அஸ்ரன் இன்ஸ்ரிரியூட், 101/10, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். [சி-107]

108 Brown Road A/L 89 பொது இரசாயனம் ஆசிரியர் சத்தீஸ் ஆரம்பம் (10-07-87) வெள்ளி 5 p-m (செவ். வியா, வெள்ளி 5-00 p-m) சி-9747

**வெளிவந்துவிட்டன!**

★ சமூகக்கல்வி
ஆண்டு: 10,
2ம், 3ம், பகுதி

★ சமூகக்கல்வி
படவேலை
ஆண்டு 10 & 11

★ சமூகக்கல்வி
6, 7, 8. 9, நூல்கள்
பயிற்சிகள்

க. குணராசா M. A.
கமலா குணராசா B. A.

**ஸ்ரீலங்கா புத்தகசாலை**
யாழ்ப்பாணம்.
சி-9723

---

## முதல் வருட நினைவஞ்சலி



**திருமதி கணபதிப்பிள்ளை அன்னப்பிள்ளை**
புங்குடுதீவு-11
(போக்கத்தை)

தோற்றம்: 13-02-1914
மறைவு: 19-06-1986
திதி: 08-07-1987

அன்புடனும் பண்புடனும் எம்மை வளர்த்து எமக்கு நல்வழி காட்டிய எங்கள் அன்புத் தெய்வம் எம்மை விட்டு மறைந்து ஒருவருடம் சென்றாலும் உங்கள் நினைவு எங்கள் நெஞ்சங்களை விட்டு என்றும் நீங்காது. உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம். அன்புடன் நினைவு கூரும்:

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்கள்

புங்குடுதீவு கிழக்கு,
புங்குடுதீவு-11.

(சி 9711)

---

அகதிகள் பராமரிப்புக்கு---

# நூல்நிலையம் 16 ஆயிரம் ஒதுக்கீடு

(உடுவில்)

அச்சுவேலி, கொல்லங்கலட்டி, கையிட்டி, தெல்லிப்பழை, மாவிட்டபுரம், மயிலிட்டி போன்ற இடங்களில் இருந்து அகதிகளாகி இணுவில் சைவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் சுமார் 60குடும்பத்தினர் தஞ்சமடைந்துள்ளனர்.

இணுவில் பொதுசன நூல் நிலையத்தினர் இவர்களுக்கு வேண்டிய நிவாரணப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

அகதிகளாகியுள்ளோரில் சிலர் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடனும் கை, கால் முறிவுகளுடனும் வந்து சேர்ந்தனர் என்றும் அவர்களுக்கு ஏற்ற வைத்திய வசதிசெய்து கொடுக்கப்பட்டுள்ளதாகவும் நூல்நிலைய செயலாளர் திரு. செ. ஜெயக்குமார் கூறினர்.

சிறுவர்களுக்கான சகல உதவிகளையும் சிறுவர் போஷாக்கு நிவிர்த்தி நிலையம் செய்து வருவதாகவும் டாக்டர் கருணைகரனல் வைத்திய சேவைகள் அளிக்கப்படுவதாகவும் தலைவர் திரு சி. சண்முகலிங்கம் கூறினர்.

அகதிகளாகியுள்ளவர்களில் பலருக்கு வேலைவாய்ப்புக்கள், வேறுவீட்டுவசதிகளை செய்து கொடுப்பதிலும் சனசமூக நிலைய உறுப்பினர்கள் ஈடுபட்டுள்ளனர்.

சனசமூக நிலைய புத்தகநிதிக்கென ஒதுக்கப்பட்டுள்ள ரூபா 16,000 அகதிகள் பராமரிப்புக்காக செலவிடப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

பாதிக்கப்பட்ட மக்களின்---

# கண்ணீர்க் கதை கேட்டு கலங்கினர் சௌத்திரி

(அச்சுவேலி)

இராணுவ நடவடிக்கைகளினல் பாதிக்கப்பட்ட மக்களின் கண்ணீர் கதைகளைக்கேட்டு கண் கலங்கிய இந்தியச்செஞ்சிலுவைச் சங்கப்பிரதிநிதி திரு. சௌத்திரி, பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல்கூறி தேற்றினர்.

கடந்த திங்கட்கிழமை காலை ஆவரங்கால் ஸ்ரீ நடராச இராமலிங்க வித்தியாலயத்தில் நடைபெற்ற இந்திய உணவுப் பொருள்கள் விநியோகத்தைப் பார்வையிட வந்த இந்திய செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி திரு. சௌந்திரி, அங்கு தங்கியிருந்து உணவுப் பொருள்கள் பெற்ற மக்களுடன் மிக அன்பான முறையில் உரையாடி அவர்கள் கூறியதை செவிமடுத்தார்.

வெலிக்கடை சிறைச்சாலையில் 1983ம் ஆண்டு படுகொலை செய்யப்பட்ட திரு. சி. சத்திவேஸ்வரனின் தாய் திருமதி சின்னப்பு தனது மகனுக்கு நடந்தவற்றையும் தனது குடும்பம் மகன் இன்றி படும் சிரமங்களையும் அழுதழுது கூறினர். பலரும் அவர் முன் தமது கண்ணீர்க் கதைகளை கூறி அழுதனர்.

---

எமது

# நேற்றைய வெளியீடுகள்

சிவாஜி ★ சாவித்திரி ★ M. N. ராஜம்
"பாவை விளக்கு" (V. G. P.)

ஜெமினி ★ சாவித்திரி ★ நாகேஷ்
"தேன் மழை" (V. G. P.)

**குணம் வீடியோ சென்ரர்**
42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23665. (எ-147)

---

யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

# பதவி வெற்றிடம்

**தொழிற்சாலை உதவி முகாமையாளர் (ஆண்)**

கல்வித்தகைமைகள்: க.பொ.த.சான்றிதழுடன், பல்தொழில்நுட்ப நிறுவன தேசிய தொழில்நுட்ப (இயந்திரவியல்) சான்றிதழ் அல்லது பட்டதாரி சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

அனுபவம்: இயந்திரவியல், மின்சாரவியல் துறையில் குறைந்தது இரண்டு வருடங்கள், ஒரு தொழில் நிறுவனத்தில் முகாமைத்துவ அனுபவம் இருத்தல் வேண்டும். கால்நடை உணவு தயாரிப்பில் அனுபவமுடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

வயது: 25 — 45 வரை

சம்பளம்: 500 — 840 ............... (படிகள் தவிர) 20X5 — 30X8

விண்ணப்ப முடிவுத் திகதி: 25-7-87

விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி:

தலைவர்
யாழ். மாவட்ட அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம்,
திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்.
(எ-146)

---

# ஜீவாவுக்கு வாழ்த்து

(யாழ்ப்பாணம்)

இலங்கை வரலாற்றின் இலக்கியத்துறையில் விரல் விட்டு எண்ணக் கூடியவர்கள் ஒரு சிலரே உள்ளனர். அவர்களின் வரிசையில் திரு. டொமினிக் ஜீவாவும் ஒருவர். அவர் தனது வாழ்வை உலகளாவியத் தத்துவார்த்த கொள்கைப் பிடியில் பிணைத்து விட்டிருக்கிறார். அத்தோடு திரு. டொமினிக் ஜீவா சாதாரண ஒரு தொழிலாளியாக இருந்துகொண்டே எழுத்துலகிலும் பிரவேசித்துள்ளமை அனைவரையும் பிரமிக்கச் செய்துள்ளது.''

ஒடுக்கப்பட்ட உரிமையற்ற மக்களுக்காக குரல் கொடுக்கும் ஒரு சிறந்த எழுத்தாளரான திரு. ஜீவா தொடர்ந்து பணியாற்ற நீடுழி வாழ்ந்து எழுத்துத்துறையில் பணியாற்ற வேண்டும்.

இவ்வாறு ஏழாலை மேற்கு லெனின் சன சமூக நிலையம் மணி விழா காணும் எழுத்தாளர் மல்லிகை ஆசிரியர் ஜீவாவுக்கு வாழ்த்துத் தெரிவித்துள்ளது.

---

நல்லூர்

# லியோ கழக நிர்வாகிகள்

(ஒட்டுசுட்டான் நிருபர்)

நல்லூர் லியோ கழகத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நல்லூர் மங்கையற்கரசி ம. ம. வித்தியாலயத்தில் நடைபெற்றது.

நடப்பு வருட நிர்வாகிகளாக பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: சீ. முரளிதரன், செயலாளர்: கே. சத்தியகுமார், பொருளாளர்: விஜிதா மற்றும் 10 உறுப்பினர் தெரிவு செய்யப்பட்டனர்.

# பஞ்சாப்பில் 38 இந்துக்கள் சீக்கிய தீவிரவாதிகளால் சுட்டுக்கொலை!

## குருபூர்ணிமா தினம்

யாழ்ப்பாணம், புதன்

பருத்தித்துறை ஸ்ரீராம கிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தில் குருபூர்ணிமா தினம் இம்மாதம் 11ம் திகதி சனிக்கிழமை கொண்டாடப்படவுள்ளது. அன்யைதினம் காலை விசேட பூஜையும், அதன் பின் அன்னதானமும் நடைபெறவுள்ளது. [வா]

## பயணிகள் கடத்தப்பட்டு அனர்த்தம் பதற்றத்தை தணிக்க இராணுவம் அழைப்பு

(புதுடில்லி)

**பஞ்சாப்பில் நேற்றுமுன்தினமிரவு பயணிகள் பஸ் ஒன்றை கடத்திச் சென்ற சீக்கிய தீவிரவாதிகள் அதில் பயணம் செய்த 38 இந்துக்களை சுட்டுக் கொலைசெய்தனர். 23 பேர் பலத்த காயங்களுடன் ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இச் சம்பவத்தையடுத்து எழுநதுள்ள பதற்றத்தை தணிக்க மாநிலத்தில் இராணுவம் பல பகுதிகளிலும் அழைக்கப்பட்டுள்ளது.**

நேற்றுமுன்தினமிரவு பட்டியாலா மாவட்டத்திலிருந்து சண்டிகார் அம்பாலா நகரபிரதான வீதியில் சென்றுகொண்டிருந்த பஸ்சை காரொன்றில் பின்தொடர்ந்த சீக்கியதீவிரவாதிகள் சனசந்தடியற்ற கிராமஎல்லைப் பகுதியில் பஸ்ஸின் முன்னே காரைநிறுத்தி பஸ்சை வழிமறித்தனர்.

உலகச் செய்திகள்

5 பேர் கொண்ட இந்த ஆயுதக்குழுவினர் சாரதியைதாக்கி பஸ்சை குடியிருப்புகளற்ற பகுதியொன்றினுள் செலுத்திச்சென்றனர். பஸ் நிறுத்கப்பட்டதும் பயணிகள் பஸ்ஸிலிருந்து வெளியே இறக்கப்பட்டு துப்பாக்கி நபர்களால் கண்டபடி சுடப்பட்டனர்.

இதில் 11பெண்கள், 3 குழந்தைகள் உட்பட 38 பேர் ஸ்தலத்திலேயே பலியானுர்கள் 23 பேர் பலத்தகாயங்களுடன் வீழ்ந்தனர். 7பேரின் நிலை கவலைக்கிடமாயுள்ளது கொலைகாரர்கள் அவ்விடத்தைவிட்டகன்று பலமணி நேரங்களின் பின் காயமடைந்த சிறுவனொருவன் பிரதானவீதிக்கு வந்து மேற்படி சம்பவம் பற்றிய தகவலைத் தெரிவித்தான்.

இதனையடுத்து பஞ்சாப்கவர்னர் திரு. சித்தாத்தசங்கர்ரேயும், பொலிஸ் மற்றும் நிர்வாகத் துறையைச் சேர்ந்த உயரதிகாரிகளும் ஸ்தலத்திற்குச் சென்று பார்வையிட்டனர். பஞ்சாப்பில் நிகழ்ந்த இச்சம்பவத்தையடுத்து அம்மாநிலத்தில் உடனடியாக இராணுவம் அழைக்கப்பட்டு பல இடங்களிலும் தேடுதல்நடவடிக்கைகள் இடம்பெற்று வருகிறது.

பஞ்சாப் மாநிலத்தில் இச்சம்பவத்துடன் இவ்வருடத்தில் 585 இந்துக்கள் தீவிரவாதிகளின் வன்முறைகளால் கொல்லப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (சி)

## ஸாம்பியாவில் படகு விபத்து; 28 பேர் பலி; 300 பேரைக் காணவில்லை

லுசாக்கா ஜன. 7

ஸாம்பியாவின் வடபகுதியில் கிராமமொன்றில் இடம்பெற்ற பயணிகள் படகு விபத்தில் 28பேர் நீரில் மூழ்கிமாண்டதாகவும், 300பேர் வரையில் காணுமல் போயுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஸாயிரா கிராமத்தில்கடந்த ஞாயிறு அயற்கிராமமக்களையும் ஏற்றிக்கொண்டு சென்ற பயணிகள் படகு ஆற்றுப்பகுதியின் நடுவில் திடீரென கவிழ்ந்ததில் இப்பரிதாப சம்பவம் இடம்பெற்றது.

500 பேருடன் சென்ற இப்படகு விபத்தில் சிக்கியதில் 28 பேர் நீரில் மூழ்கி மாண்டதாகவும், 300 பேர் வரையில் காணுமல் போய்விட்டதாகவும் சிலர் நீந்தித் தப்பித்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது காணுமல் போனவர்கள் விபரம் பற்றி எதுவும் தெரிவிக்கப்படவில்லை. (சி)

## திசைமாறும் கார்களுக்கு வழிகாட்டும் கருவி

## லண்டனில் இலங்கை தமிழ் மாணவர் சாதனை

லண்டன், ஜூலை, 7

இலங்கைத் தமிழ் இளைஞர் செல்வன ராஜூ ஞானபிரகாசம் தொலைதூர பிரதேசங்களில் மோட்டார் வாகனங்கள் காணுமல் போவதைத் தடுக்கும் புதிய முறை ஒன்றை இங்கிலாந்தில் கண்டுபிடித்து சாதனை ஒன்றை ஏற்படுத்தியுள்ளார் இவரின் சாதனை குறித்து லண்டன் பூகோள ஆராய்ச்சிக்கழகம் பெறுமதியான பரிசுகள் வழங்கி கௌரவித்துள்ளது.



தொலைதூர பயணங்களை மேற்கொள்ளும்மோட்டார் வாகனங்கள் அடிக்கடிகாணுமல்போவது வெளிநாடுகளில் வழமையான சம்பவம் எனினும் இவ்வாறு காணுமல்போன வாகனங்களையும் சாரதியையும் கண்டுபிடிக்க அவ்வவ் நாடுகளுக்கு நீண்ட நாட்கள் எடுத்தன. இதனை விரைவுபடுத்தும் நடவடிக்கைகள் இதுவரையில் மேற்கொள்ளப்படாதிருந்தது.

இங்கிலாந்தில் புறாம்லி என்னுமிடத்தில் மலோரி பாடசாலையில் கல்விபயிலும் செல்வன் ராஜூ ஞானப்பிரகாசம் (வயது 18) இம்முயற்சியில் 30 மணிநேர ஆராய்ச்சியின் பின் வெற்றிகரமான வழியொன்றை கண்டுபிடித்தார்.

இதன்படி மோட்டார் வாகனத்தில் தொலைக்காட்சி ஒன்று பொருத்தப்படும். இத்தொலைக்காட்சியில் ஏற்கனவே மோட்டார் வாகனக்காரர் செல்ல வேண்டிய தொலைதூர பிரதேசத்தின்பாதைவிபரங்கள் வரைபடம் மூலம் பதிவு செய்யப்பட்டிருக்கும் இவ்வாகனமும் தகவல் நிலையம் ஒன்றுடன் தொடர்புகளை வைத்திருக்கும்.

வாகனம்செல்லவேண்டிய இடத்தை சாரதி தொலைக்காட்சி வரைபுமூலம்அறிந்து கொண்டு வாகனத்தைச் செலுத்திச் செல்லலாம். தொலைதூரம் சென்றபின் வழியில் ஏதாவது தடங்கல் ஏற்பட்டு மீண்டும் பயணம் ஆரம்பித்த இடத்திற்குத் திரும்பவேண்டுமாஞலும் அத்தொலைக்காட்சி பாதை வாகனம் வந்த பாதையை வரைபு மூலம் தெளிவுபடுத்தி மீளவும் ஆரம்ப இடத்திற்கு வந்தடையவழிவகுக்கும்.

இதேபோன்ற அரியபல சாதனைகளை கண்டுபிடித்த 20 சாதனையாளர்களுள் ஒருவரான ராஜூ ஞானப்பிரகாசம் இச்சாதனைக்காக பெறுமதிமிக்க ஒரு சோடி தொலைநோக்குப் பார்வை சாதனத்தையும் சான்றிதழையும் லண்டன் பூகோள ஆராய்ச்சி நிலையத்திடமிருந்து பரிசாகப் பெற்ருர்.

இதேவேளை அமெரிக்க நாஸா' விண்வெளி நிலையம் ஐ ரி என். கழகத்துடன் இணைந்து நடாத்தும் புதிய போட்டி ஒன்றிலும் கலந்துகொள்ள இவர்தனது கண்டுபிடிப்பை பயன்படுத்தவுள்ளார்.

தற்போது லண்டன் புறாம்லி மலோரிபாடசாலையில் உயர்தா பிரிவில் கணிதம், பௌதிகவியல், கொம்பியூற்றர், விஞ்ஞானப்பாடங்களை கற்கும் ராஜூக்கு கேம்பிறிட்ஜ் பல்கலைக்கழகத்திலும், லண்டன் இம்பீரியல் கல்லூரியிலும், ஆகாய விமானம் ஓட்டும் கலையில் பட்டப்படிப்பை மேற்கொள்ள அனுமதி கிடைத்துள்ளது.

இங்கிலாந்தில் புதிய சாதனை ஒன்றை நிகழ்த்தி பல உலக சாதனைகளுக்கு வழிவகுத்திருக்கும் இலங்கைத்தமிழ் இளைஞர் ராஜூ ஞானப்பிரகாசம் யாழ் சென். ஜோன்ஸ் கல்லூரியின் பழைய மாணவன் என்பது குறிப்பிடத்தக்கது.

தொகுப்பு:

ரி. சிவகணேசன்

## வளைகுடாப் பிரதேசத்தில்;

# அமெரிக்க கப்பல்களுக்கு யுத்த விமானம் பாதுகாப்பு

## ஈரான் தாக்குதலுக்கு அஞ்சி புதிய ஏற்பாடு

வாஷிங்டன், ஜூலை 7

வளைகுடா பிரதேசத்தினுள் பிரவேசிக்கும் அல்லது அதைவிட்டு வெளியேறும் அமெரிக்க யுத்தக்கப்பல்களுக்கும், வணிகக் கப்பல்களுக்கும் இப்போது போர் விமானங்கள் பாதுகாப்பளித்து வருகின்றன என அமெரிக்கபாதுகாப்புஅமைச்சு அறிவித்துள்ளது.

வளைகுடா பகுதியில் எழுந்துள்ள பதற்றநிலை குறித்தும் மேற்காசியாவில் அமைதி மாநாட்டுக்கான வாய்ப்புகள் பற்றியும் ஜெனிவாவில் அமெரிக்க சோவியத் அதிகாரிகள் இரண்டுநாள் மாநாட்டை ஆரப்பித்துள்ள இச்சந்தர்ப்பத்திலேயே இந்த அறிவிப்பும் வெளியாகியுளளது.

வளைகுடாபகுதியில் ஈரான்-ஈராக் யுத்தம் நிறுத்தப்பட்டு சோவியத் போர்க்கப்பல்கள் இப்பகுதியிலிருந்து வாபஸ் பெறும் பட்சத்தில்அமெரிக்கா தனது போர்க்கப்பல்களை வளைகுடாவிலிருந்து வெளியேற்றும் என்றும் அறிவித்துள்ளது தெரிந்ததே.

இதேவேளை அமெரிக்காவும் சோவியத்யூனியனும் இவ்வாறு சில முடிவுகளை மேற்கொண்டுள்ள போதிலும்ஈரான்தனது கொள்கையில் மாற்றம்எதனையும் ஏற்படுத்தவில்லை. வளைகுடாவில் 'ஹோமோர்ஸ்' நீரிணையில் சீனத்தயாரிப்பான 'சில்க்வோம்' ஏவுகணைகளை ஈரான் பொருத்தியுள்ளது அமெரிக்காவிற்கு பெருந்தலையிடியை ஏற்படுத்தியதைவிடுத்தே மேற்படி நடவடிக்கையில் அமெரிக்கா இறங்கியது. (சி)

## இலங்கை இனப்பிரச்னை—

## இந்தியா புதிய யோசனைகள் எதனையும் தெரிவிக்கவில்லை!

### தூதரகம் அறிவிப்பு

புதுடில்லி, ஜூலை 7

''இலங்கை இனப்பிரச்னைக்குத் தீர்வு காண்பது தொடர்பாக இந்திய அரசு புதிய யோசனைகளையோ ஆலோசனைகள் எதனையுமே இலங்கையிடம் தெரிவிக்கவில்லை என்றும் இனப்பிரச்னைக்கு பேச்சுவார்த்தை மூலமே தீர்வு காணப்படவேண்டும் என்று இந்தியா வற்புறுத்தி வருகிறது.''

இவ்வாறு கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகம் பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது. அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கை இனப்பிரச்னை தீர்வுக்கு தற்போது இந்தியா புதிய யோசனைகளை தெரிவித்துள்ளதாக அண்மையில் கொழும்பு பத்திரிகைகள் சில வெளியிட்டுள்ள செய்திகள் முற்றிலும் தவறுனவை. அவ்வாறுன யோசனைகள் எதனையும் இந்தியா வழங்கவில்லை.

பிரச்னையைத் தீர்த்து வைப்பதற்கு எத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனத் தீர்மானிப்பது இலங்கை அரசாங்கத்தை பொறுத்தது. இது தொடர்பாக அண்மையில் இலங்கையிடம் தனது விளக்கத்தை இந்தியா தெரிவித்திருந்தது.

இனப்பிரச்னைக்கான தீர்வு குறித்து பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க டிசம்பர் 19ம் திகதி யோசனைகளில் தெரிவிக்கப்பட்ட அம்சங்களில் சில திருப்தியற்றவையென இந்தியா இப்போது கருதுவதாக அரசியல் அவதானிகள்தெரிவித்துள்ளனர். [சி]

## இடம்மாறிய மா மூடைகள்

நெல்லியடி, செவ்.

கரவெட்டிப் பகுதியில் உள்ள கூட்டுறவுக் கடையில் அரசு பொதுமக்களுக்கு இலவசமாக விநியோகிப்பதற்கென வழங்கிய 3 மூடை மா, பக்கத்தில் இருந்த மற்ருெரு கடையில் காணப்பட்டது

இதைக் கண்டுபிடித்த பொதுமக்கள் கிளைக் குழுவின் கவனத்துக்கு கொண்டுவந்துள்ளனர். இதுபற்றி பொது மக்கள் மேலிடத்துக்கு முறையிட்டுள்ளதாகத் தெரிகிறது.

**மணிவாக்கு**

அரசியல் சாசனம் முதலாம்தர இரண்டாந்தர பிரஜைகளுக்கு இடமளிப்பதில்லை.

— வென்டல் வில்க்கி

# நமதுநோக்கு

## இராணுவத்தை வெளியேற்றுக

ஆகாயவிமானம் மேலே பறக்கிறது. மேகமண்டலத்துக்கு மேலே போய்விட்டால் அதன் வேகமான பயணத்துக்கு தடை இராது. மனித வீரம் மிக்க உயர்ச்சிஅடைந்துவிட்டால் முரண்பாட்டுக்கு அதிக இடமிராது.

நெல்லியடித்தாக்குதலும் குறிப்பாக அதில் வீரமரணமடைந்த போராளிகளின் சாமர்த்தியமும் எம்மைஇவ்வாறு கூறத்தூண்டுகிறது. கொடியபோரில் எங்கள் இளம்செல்வங்கள் மடிகின்றனரே! இவ்விதக் கவலை இவ்வெற்றியின் மறுபக்கம்.

இந்தியசுதந்திரப்போரின் போது வெள்ளையரால் தேசத்துரோகியென்று தூக்கிலிடப்பட்டவீரன், வீரசுவர்க்கமடைந்தலாகூர் பகவத்சிங் கம்) தூக்கிலிட முன்னர் அவரைப் பார்க்க வந்த மகாத்மா காந்தி, தனது உயிரைப்பாதுகாக்க ஏதும் நடவடிக்கை எடுப்பாரென்று சந்தேகங்கொண்ட சிங் தாம் மரணத்தை வரவேற்கத் தயாராகின்றதாகவும், அந்த முடிவை எவ்வகையிலும் மாற்றலாகாதென்றும் காந்தியைக்கேட்டிருந்தார்.

அஹிம்சா மூர்த்தி மகாத்மாகாந்தி தேசபக்தன் பகவத்சிங் இழைத்தவன் செயலைக் கண்டித்த அதேசமயம் அவருடைய பராக்கிரமத்தையும் தியாகத்தையும் பாராட்டினுர்.

இங்கு நடைபெறும் போரின் இன்றையகட்டத்தில் இது நினைவுகூரவேண்டிய கருத்தாகிறது.

நாட்டின் காவல் தெய்வமான கதிர்காமக் கந்தன் இன்றைய ஆட்சியாளருக்கு ஒரு புகலிடமாகின்ருர்.

அன்று கதிர்காமம் என்ருல் சிறிலங்கா சுதந்திர ஆட்சியில் அழகு ராணி மானம்பரியின் கொலையே நினைவுக்குவரும். இன்று கதிர்காமத்தை நினைவு கூர்கையில் கடந்த வாரம் அழகுராணி ரமணியின் கொலை முன்னிற்கிறது. அங்கு வார இறுதியில் நடைபெற்ற கம்உதாவவின் கடைசி விழாவிற்கு இக்கொலை எவ்வகையிலும் எழுச்சியளிக்காது.

தென்னுடைய கதிர்காமக் கந்தன் எந்நாட்டவர்க்கும் உரியவன் என்பதை ஜனுதிபதி, பிரதமர், பாதுகாப்பு அமைச்சர், அவர்களின் பரிவாரங்கள் அனைத்தும் நினைவிற்கொள்வது நலம்,

கந்தன் கருணை வடக்கிலிருக்கும் அவனுடைய பேராலயங்களையோ அவன் தந்தையின் தேவஸ்தானங்களையோ அழிப்பதால், கொள்ளையடிப்பதால் குறைவதில்லை.

கதிர்காமத்திலிருந்து விடுத்த செய்தியில், ''வடக்கிலும் கிழக்கிலும் நடைபெறுவது ஒரு போரல்ல; சட்டம் ஒழுங்கு பேணும் நடவடிக்கைகள்'' என்று கூறுகிருர் ஜனுதிபதி.

இங்கு வாழும் மக்கள் நேரில் காணும் கொடுமைகள் போரில் இடம்பெறுவதில்லை. வடமராட்சி சிவில் நிர்வாகம், நெல்லியடிப் பேரடியால் தாமதப்படுமென்ருர் லலித்

நாமென்ன சொல்கின்ரூம்? நாடுமுழுவதும் இன்றைய நெருக்கடியிலிருந்து நீங்குவதற்கு எடுத்த முதற்படி நெல்லியடிப்பேரடி. வடக்கிலிருந்து தெற்கு வரைக்கும் மக்கள் சுதந்திரமாக வாழப் பௌத்தம் மறுமலர்ச்சியடைய பெரும்பான்மை சிங்கள மக்கள் ஏனைய சமூகத்தவருடன் சரிநிகர்சமானமாக வாழ யாழ்ப்பாணம் வந்துள்ள போர் பெரிதும் உதவும்.

இப்பகுதிகளிலிருந்து இலங்கை இராணுவத்தை முறியடித்து வீடுதிருப்ப வேண்டுமென்று நாம் கூறவில்லை.

அரசஅதிபர் தலைமையில் சீமெந்துக்கூட்டுத்தாபனம் சென்ற குழுவினர் ராணுவ அதிகாரியின் அனுமதி பெற்றிருந்தபோதும், சுடப்பட்டு மயிரிழையில் தப்பினர்; உணவுக்கட்டுப்பாட்டு அதிகாரிக்கும் இதே அனுபவம். இன்று அந்த அட்டுழியத்துக்கு இலக்கான பாடசாலை அதிபர் சிவராசா மரணத்துடன் போராடுகின்ருர்.

வடமராட்சி இராணுவ நிர்வாகம் இதுபோன்ற எத்தனைசாதனைகள் நிகழ்த்தியபோதும் இங்கு சிவில் நிர்வாகம் சுதந்திர ஆட்சியில் அல்லாது வேறு எவ்வகையிலும் உருப்படாதென அறிக. அது சடுதியில்வரலாம் அல்லது காலதாமதமாகலாம். எனவே மக்கள் பாதுகாப்பு உறுதிப்படுவது இப்பகுதியிலிருந்து இராணுவம் வெளியேறுவதாலேயே நிறைவேறும்.

பல்லாயிரம் மாணவர் குடாநாட்டில் நடைபெறும் ஏ எல் பரீட்சைக்குத் தோற்றுகின்றனர். சுமார் மூன்றுவாரம் நடைபெறும் இம்முக்கிய பரீட்சைக்குதவ ஆகக்குறைந்தது தற்காலிக போர்நிறுத்தம் இவ்வாரம் தொடக்கம் செய்வது இன்றியமையாதது இப்பெரும் பொறுப்பு எங்கள் போராளிகளுக்கு சமர்ப்பணம்!

### திருத்தம்

''பயனற்ற காரியமா?'' என்ற தலைப்பில் நேற்று வெளியான நமது நோக்கில் கடைசிப் பந்திக்கு முதல் பந்தியில் ''வெளியார் கண்டனத்தையும் வெளிப்படுத்தாமல்'' என்று இருக்கும் பகுதியை வெளியார் கண்டனத்தையும் பொருட்படுத்தாமல்'' என்று திருத்திக் கொள்ளும்படி வாசகர்களைக் கேட்டுக்கொள்கின்ரூம். (ஆ—ர்)

உலக அரசியல் — அவதானி

# அமெரிக்க சுதந்திரதினக்கொண்டாட்டம்

## சோவியத்ரஷ்யாவுக்கேபுகழ்தேடிஇருக்கிறது; காட்டர் தம்பதிகள் கணிப்பு

### வாஷிங்டன்

யூலை 4ம் திகதி அமெரிக்காவின் 211வது சுதந்திர தினம். அமெரிக்க ஜனுதிபதி றீகனுக்கு அண்மையில் ஏற்பட்ட வியாழமாற்றம் நன்ருகவில்லையென்பதுபோல தெரிகிறது ஏற்கனவே செல்வாக்கை இழந்த ஜனுதிபதி ஏழு வருடமாக இழுபறிப்படும் வளைகுடா யுத்தத்தை முடிவுகட்ட உதவினுல் மங்கிவரும் அவருடைய புகழ் மீண்டும் பிரகாசிக்கும். அமெரிக்க தேசியம் ஒரு புது மெருகு ஏற்படும்.

இந்தச் சுபதினத்தில் உலகுக்கு ஜனநாயகத்தின் உள்ளுடனை விளக்கிவைத்த அமெரிக்க ஜனுதிபதி லிங்கனை நினைவுகூர்வது பொருத்தமாகும். அதேவேளை இன்றைய அமெரிக்க ஆட்சி ஜனநாயகம் என்ற பெயரில் உலகின் பல பாகங்களிலும் தனது அதிகாரத்தை நிலைநாட்ட மக்களால் வெறுக்கப்படும் ஆட்சிகளை, மக்களை ஒடுக்கிவரும் ஆட்சிகளை, ஆதரிப்பதில் தொடர்கின்றது.

மங்கும் பெயரை பொங்கவைக்கமுயலும் அதிபர் றீகன் அமெரிக்க மக்களுக்கு ஒரு 'பொருளாதார உரிமை சாசனம்' Bill of Economic Rights தயாரிக்கிருர். அது அமெரிக்க மக்களுக்கு மிக அவசியமான போதும் இன்றுஉலகுக்குஅமெரிக்கா வழங்கவேண்டிய பரிசு சமாதானமே; அதற்கு அழிவிலிருந்து உலகை காப்பாற்ற வல்ல அணுஆயுத ஒழிப்பு இதற்கு அவசியம். சோவியத் ரஷ்யாவும் அமெரிக்காவும் ஒன்றுபட்டால் அது நனவாகும்.

### லிங்கன்

இன்று லிங்கன் உயிருடனிருந்தால் லிங்கன் மெமோறியல் அமெரிக்காவின் என்றும் அழியா நினைவு சின்னம்- அன்று அடிமைவியாபாரத்தை ஒழித்ததுபோல, இன்று அணு ஆயுத பெருக்கத்தை ஒழிப்பதில் வெற்றி நிட்சயம் காண்பார். பலமாற்றங்களை இந்த இரண்டு நூற்ருண்டுகளுக்கும் மேல் கண்ட சுதந்திர அமெரிக்கா இன்று 'செல்லப்பிள்ளை சீலை விடாது, பள்ளிக்குப் போனுல் பாடங்கொடாது. என்பதுபோல நடப்பதற்கு இன்று இரண்டாம் தடவை ஜனுதிபதியாக இரண்டாம் தடவை ஆட்சிபுரியும் றீகனின் கொள்கைகள் ஓரளவிற்கு காரணமாயிருக்கின்றன.

### வளைகுடா

''வளைகுடாப் பிரதேசத்திலிருந்து வேற்று நாட்டுப் போர்க்கப்பல்கள் அகற்றப்படவேண்டும்'' என்கிறது சோவியத் யூனியன், நல்ல நியாயமானகோரிக்கை,ஆனுல் கோர்பச்சோவ் இதனை சொல்வதற்கு என்ன உரிமை இருக்கிறது? இந்தப் போட்டியே இன்று உலகை ஆட்டிவைக்கிறது.

யூலை நடுப்பகுதியில் பதினெரு குவைத் கப்பல்களில் அமெரிக்க கொடியைப் பறக்கவிட்டு, ஈரானின் தாக்குதல்களிலிருந்து அவற்றை பாதுகாக்க அமெரிக்க போர்க்கப்பல்களை பயன்படுத்துவதே றீகனின் திட்டம்.

இராணுவத் திட்டத்தைக் கண்டுஎங்கள் மக்கள் மட்டுமா பயப்படுகின்றனர்? அமெரிக்கக் காங்கிரஸ் றீகனின் சண்டித்தனத்தைக்' கண்டு அதனை தடுக்க முடியாத நிலையில் இந்த அர்த்தமற்ற போரில் அமெரிக்கா இழுக்கப்படுமோ என்று அஞ்சுகிறது.

சோவியத் ரஷ்யா இந்தப் போர் எல்லையில் தென்படாதிருந்தால் அமெரிக்காவும் வெளியேறுமென்ற பிடிவாதம் றீகனுக்கு உண்டு

உலகில் இவ்விரு வல்லரசுகளும் ஒன்றைச் சொல்லி இன்னென்றைச் செய்வதால் தங்களுக்குள் மட்டுமல்ல, ஏனைய உலகநாடுகளும் இவற்றை நம்பமுடியாத நிலையில் - உலகெங்கிலும் உருவான 'குட்டிப்' போர்கள் நீடித்துப் பெருக்கும் சாத்தியக் கூறுகள் காணப்படுகின்றன.

ஈரானின் ஷா போய் விட்டார். மார்க்கொஷ் மழை விட்டும் அவருடைய தூவானம், பிலிப்பைன்ஸில் முற்ருக விடவில்லை பாகிஸ்தான் ஜனுதிபதியின் பத்துவருட ராணுவஆட்சியை இரு தினங்களுக்கு முன் லாகூரில் குண்டு வெடிப்பாலும் அதன்மூலம் ஏற்பட்ட கொலைகள் மூலமும் பதினெரு எதிர்க்கட்சிகள் எதிர்த்துக் கொண்டாடினர்.

### சியோல்

பிலிப்பைன்ஸில் மாக்கோஸை ஆதரித்து, நாட்டைச் சூறையாட உதவிய அமெரிக்கா, அதேபோல் தென் கொரியாவில்ஜனுதிபதி சுண்-டூ ஹாவின் சர்வாதிகார ஆட்சியையும் அவருடைய திறந்த பொருளாதாரக் கொள்கையையும் வெகுவாக ஆதரித்து பாராட்டி வந்தது.

இன்று சுண்டூவின் ஆட்சி ஆட்டம் கண்டிருக்கு நிலையில் பல சீர்திருத்தங்கள் தவிர்க்க முடியாதவை. அவற்றை ஜனுதிபதி சுண்டூ நடைமுறைக்கு கொண்டுவர இணங்கியிருந்தபோதும், மாணவர் படையெடுப்பால் தலைநகர் சியோல் அல்லோலகல்லோலப் படுகின்றதுஆர்ப்பாட்டத்தில் சுடப்பட்டு இறந்த மணவன் இருந்த ஆஸ்பத்திரியை ஐயாயிரம் அதிரடிப்படை காவல் புரிகிறது.

ஜனுதிபதி றீகன் வெல்லும் பக்கத்தை நாடியிருக்கிருர். தென் கொரியா ஜனநாயகத்தை நிலைநிறுத்த அரசியல் அமைப்பு,சுதந்திரமான ஜனுதிபதி தேர்தல் போன்ற திருத்தங்கள் கொண்டுவர வேண்டுமென வற்புறுத்துகிருர். பல்லாண்டுகளாக உருவெடுத்த எதிர்ப்பின் வலிமையும் மாணவ போராட்டமும் இவற்றைக் கட்டாயமாக்கிவிட்டன. றீகன் என்ற சூரியன் அஸ்தமிக்கும் காலத்திலும் மிளிரும் வாய்ப்பு வளைகுடா போர் நிறுத்தத்தில் பெரிதும் தங்கியுள்ளது.

### ஐ.நா. தீர்மானம்

பல தடவைகள் முயற்சி செய்த ஐ.நா. இன்று ஈரான்-ஈராக் போரை நிறுத்த எடுக்கும் நடவடிக்கையில், அமெரிக்காவும் சோவியத் யூனியனும் ஒன்றுபடக்கூடிய சூழ்நிலை உருவாகிறது.

போரைமுடிவுக்குக்கொண்டுவர ஈரான் பிடிவாதமாக் கொள்ளும் நிபந்தனை ஈராக் ஜனுதிபதி சதாம் ஹுசெயின் பதவியிலிருந்து அகற்றப்படவேண்டுமென்பதே! சமாதானப்பேச்சு காரசாரமாக நடைபெறுகின்றது; அதேசமயம் சண்டையும் நடைபெறுகிறது.

### இலங்கை

இந்தப் பின்னணி இலங்கைக்குப் பொருத்தமா? இன்று இந்தியா, இலங்கைப் பிரச்னைக்கு சமாதானம் காணமுடியாத வேளையில், அமெரிக்கா முன்வருவது நல்லதென்று ஒரு பிரபல அரசியல் 'ஏட்டு' நிபுணர் கருதுகிருர்; அமெரிக்கா தலையிட்டால் தமிழருக்குச் சாதகமாகவிருக்குமென்று கருதுகிருர்? இவர் அமெரிக்காவில் தொழில் புரியும் தமிழர் ஆகையால் இவருடைய கருத்து சந்தேகத்துக்குரியது. அண்மையில் நடைபெற்ற இந்திய உணவு விமான 'படையெடுப்பில்' அமெரிக்கா இலங்கைக்கு கைவிரித்துவிட்டதே என்று இங்குள்ள அரச சார்பான நாளேடுகள் 'முகாரிராகம்' பாடுகின்றன.

இந்த ஆலோசனை உருவெடுத்தால் ஈரானைப்போல, இலங்கைத் தமிழர் ஜனுதிபதி பதவி விலகவேண்டுமென்று நிபந்தனை விதித்தால் ஆச்சரியமாயிருக்குமா? ஒரு அக்கினே இதற்கு அவசியமில்லையென்பது தெளிவு.

### யூலை 4ம் திகதி

அமெரிக்காவின் சுதந்திர தினத்தைக் கொண்டாடிய பெருமக்களில் முன்னைநாள் ஜனுதிபதி காட்டர் தம்பதிகள் முக்கிய இடம்பெறுகின்றனர். இவர்கள் இக்கொண்டாட்டத்தை லண்டனில் கண்டு களித்தனர்.

சோவியத் யூனியன் விருந்தினராக மாஸ்கோ சென்ற காட்டர் தம்பதிகள் மாஸ்கோவிலிருந்து வீடுதிரும்பும்போது லண்டனில் தங்கிநின்றபோது அவர்கள் அத்தினத்தில் விடுத்த செய்தி உலகனைத்துக்கும் தேற்றம் அளிக்கிறது. 'கிரெம்ளின் தலைவர் மிக்கெயில் கொர்பச்சேவ்தான் உலகிலேயே பெரும் மாற்றங்களைக் கொண்டுவர முயலும் தலைவர். அணு ஆயுதங்களைக் கட்டுப்படுத்துவதால் சமாதான முன்னேற்றங்கள் ஏற்படவேண்டும் என்ற காரணத்தால் உலக மக்கள் கொர்பச்சேவையே நம்பிக்கையுடன் நோக்கிக்கொண்டிருக்கின்றனர்.''

## அலங்காரஉற்சவம் இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வண்ணை அருள்மிகு கதிர்வேலாயுதசுவாமிகோயில் வருடாந்த அலங்கார உற்சவம் இன்று பகல் விசேட அபிஷேக அராதனைகளுடன் ஆரம்பமாகின்றது.

ஒன்பதாம்நாள் சங்காபிஷேகம், திருக்கல்யாணத்துடன் உற்சவம் முடிவடைகிறது.

## சுகாதார வாரம்

(பண்டத்தரிப்பு)

இம்மாதம் 6ம் திகதி ஆரம்பமான சுகாதார வாரம் 12ம் திகதிவரை அனுஷ்டிக்கப்படவுள்ளது.

யாழ். மாவட்டத்திலுள்ள சகல சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் சுகாதார வாரத்தை யொட்டி குடும்பநல சேவையாளர்கள், பொது சுகாதார பரிசோதகர்கள் ஆகியோரின் அனுசரணையுடன் சுகாதார கருத்தரங்குகளை நடாத்தவும், தொற்றுநோய்த் தடுப்பு, போஷாக்கு உணவு குடும்ப சுகாதாரம் ஆசியன பற்றி பொதுமக்களிடையே பிரச்சாரங்களை நடாத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

## நோயாளர் அதிகரிப்பு

(பலாலி)

சுன்னுகம் மத்திய மருந்தகத்திற்கு வரும் வெளிநோயாளர் தொகை தற்போது அதிகரித்துள்ளது.

## 43 பேருக்கும் 17-ம் திகதிவரை விளக்கமறியல்

(கொழும்பு)

ஆஸ்திரேலியாவுக்குச் செல்வதற்காக கட்டுநாயக்கா விமானநிலயத்திற்குச் சென்றபோது கைதுசெய்யப்பட்ட யாழ்ப்பாணத்தைச் 43 தமிழர்களும் இம்மாதம் 17ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

நீர்கொழும்பு நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்ட 43 பேரும் தற்போது நீர்கொழும்புச் சிறையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளையில் இவர்களை ஏமாற்றியதாகக் கூறப்படும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலயத்தின் உரிமையாளர்களை ரகசியப் பொலிசார் விசாரணைசெய்துவருகின்றனர்.

## கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், புதன்

அரியாலை அருள்மிகு ஞான வைரவர் கோவில் புனருத்தாரண மகா கும்பாபிஷேகம் இன்று நடைபெறுகின்றது. இக்கும்பாபிஷேக நிகழ்வுகள் கடந்த 3ம் திகதி முதல் தொடர்ந்து நடைபெற்றுவருகின்றன.

கிரியா நிகழ்வுகளுக்கு பிரதம சிவாச்சாரியார் சிவஸ்ரீ கு. பாலசுப்பிரமணியக் குருக்கள் பொறுப்பாகவுள்ளார்.

## படையினரின்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கொடியுடன் பாடசாலைக்குச் சென்றபோது அங்கு 'சென்றி'யில் நின்றிருந்த இராணுவத்தினரின் தாக்குதலுக்குள்ளாகி பலத்த காயத்துடன் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

அமபர் சிவராசா கடந்த நான்கு நாட்களாக யாழ். ஆஸ்பத்திரியில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவின் சிகிச்சைக்குட்படுத்தப்பட்டிருந்தார்.

கல்வித்துறையில் அருந்தொண்டாற்றிய திரு. சிவராசா அண்மையில் எம். ஏ. பரீட்சையில் சித்திபெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது [வா]

## நினைவஞ்சலி மோட்சதீபம்



அமரர்
ரா. கந்தசாமி ஆச்சாரி
அவர்கள்
[பிரபலஸ்தபதி]

16-5-87 அன்று சிவபதமடைந்த அன்னாரின் மோட்சதீபக் கிரியைகள் இன்று [8-7-87] காலை எமது இல்லத்தில் நடைபெறும். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய அனைவரும் இறைவனை வேண்டுகிறோம்.

இங்ஙனம்:
மனைவி, மகன்மார்கள், மகள்மார்கள், மருமக்கள், பேரன், பேத்திமார்கள்.
78/8, கஸ்தூரியார்வீதி,
யாழ்ப்பாணம்

[சி-9755]

## கஷ்டப்பிரதேச

[1ம் பக்கத் தொடர்ச்சி]

களின் இடங்களுக்கே மேற்படி ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்களென்றும் தெரிவிக்கப்படுகின்றது. [சி]

## இந்திய நிவாரணப்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மக்களுக்கு உணவு வழங்கும் நடவடிக்கையை நாம் அனுமதிப்போமானால் நாட்டின் ஒரு பகுதியை இந்தியாவிற்கு தாரைவார்த்து விட்டோம் என்றநிலைக்கு நாம் தள்ளப்படுவோம் என்றார்.

மனிதாபிமானரீதியில் இந்தியா உணவுப் பொருட்களை அனுப்பிவைக்க வேண்டுமென்று விரும்பினால் அவ் உணவுப் பொருள்கள் கொழும்பில் இறக்கப்பட்டு இலங்கை, இந்திய அரசாங்கங்களின் மேற்பார்வையின் கீழ் விநியோக வேலைகள் மேற்கொள்ள வேண்டுமென்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

### பின்னணியை கவனிக்க வேண்டும்

'யாழ்ப்பாண மக்களுக்கு விமானமூலம் நிவாரணப் பொருள்களை விநியோகித்த செயல் இலங்கை அரசாங்கத்திற்கு நாகரிகமான முறையில் எம்மால் விடுக்கப்பட்ட எச்சரிக்கையாகும் என்ற இந்தியப் பிரதமர் ராஜிவ்காந்தி கூறிய தன் பின்னணியை கவனித்து இந்நடவடிக்கைமீது நாம் கண்ணோட்டம் செலுத்தவேண்டும் என்று கூறிய பிரதமர் நிவாரணப் பொருள்கள் வழங்கும் நடவடிக்கை ஒரு ஆபத்தான கட்டத்தை ஏற்படுத்தியுள்ளதால் மேலும் இந்திய நிவாரணப்பொருட்களை தடுத்து நிறுத்துவதற்கான ஒருகட்டம் ஏற்படலாம் என்றும் குறிப்பிட்டார்.

### சிங்கள மக்கள் மத்தியில் பீதி

இதைஅடுத்துப்பேசிய உயர் கல்வி பிரதியமைச்சர் ஏ.எம். அத்தனுயக்கா தமதுரையில்: இந்தியக் கப்பல்களின் வருகை யாழ்ப்பாணத்திற்கு வரவிருக்கும் இந்திய இராணுவத்திற்கு உணவுப் பொருள்களை களஞ்சியப்படுத்துவதற்கான ஒரு முன்னோடி நடவடிக்கை என்ற பீதி பெரும்பாலான சிங்கள மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது என்று கூறினார்.

தேசியபந்தோபஸ்து அமைச்சர் திரு லலித் அத்துலத்முதலி உட்பட பல அரசாங்க அமைச்சர்கள் இக்கூட்டத்தில் கலந்துகொண்டு காரசாரமாக கருத்துக்களை வெளியிட்டனர். (க)

## நெல்லியடி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இத்தாக்குதல் தொடர்பாக திரு. டிக்ஸிற்றை சந்தித்த உயரதிகாரிகள்; இந்திய நிவாரணப் பொருள்கள் தமது தாயகத்துள் வந்து விநியோகம் முடிவடையும்வரை யுத்த நிறுத்தத்தை கடைப்பிடிப்பதாக ஏற்கனவே அறிவித்த தமிழீழ விடுதலைப் புலிகள் தமது அறிவிப்பையும் மீறி நெல்லியடி இராணுவமுகாமைத் தகர்த்துள்ளனர் என்றும் திரு டிக்ஸிற்றிடம் முறையிட்டுள்ளனர்.

இதேவேளையில் இந்திய உணவு விநியோகத்தின்போது தாம் தாக்குதல் நிறுத்தத்தை கடைப்பிடிக்கப் போவதில்லையெனக்கூறிய இராணுவத்தினர் இவ் விநியோக நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதாகக் கூறியபோதிலும் வடமராட்சி, வவனியா, முல்லைத்தீவு.மட்டக்களப்பு. மூதூர் பகுதிகளில் கடந்த இருவாரங்களில் முப்பதுக்கும் மேற்பட்ட அப்பாவிப் பொதுமக்களை பல்வேறு தாக்குதல்களிலும் கொலைசெய்துள்ளதாக அவ்வப்பகுதி பிரஜைகள் குழுக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. [சி]

வடமராட்சியில் —

# ராணுவம் தேடுதல் வேட்டை மக்கள் வெளியேற்றம்!

[அச்சுவேலி நிருபர்]

வடமராட்சிப் பகுதியில் மீண்டும் இராணுவத்தினர்வீடு வீடாகச் சென்று தேடுதல் வேட்டையில் ஈடுபட்டுவருவதால் ஆயிரக்கணக்கான மக்கள் தமது வீடுகளைவிட்டு வெளியேறிய வண்ணமுள்ளனர்.

இராணுவத்தினரின் நடவடிக்கைகளுக்கு அஞ்சி உடுப்பிட்டி, இமையாணன், கம்பர்மலை, நெல்லியடி, புருப்பொறுக்கி, வல்வெட்டி, வல்வெட்டித்துறைப் பகுகதிளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் கையில் அகப்பட்ட பொருட்களுடன் தமது வீடுகளைவிட்டு வெளியேறுகின்றனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை பலர் இரவிரவாக வல்லைவெளி சதுப்புநிலம் ஊடாக அச்சுவேலி, ஆவரங்கால் பகுதிகளுக்கு வந்துசேர்ந்து ஆலயங்கள், பாடசாலைகள், உறவினர் வீடுகளில் தங்கியுள்ளனர். [ஓ]

வீடு பாக்கச் சென்றவர் —

## 4 மணி நேரம் வெய்யிலில் காத்திருந்தும் ஏமாற்றத்துடன் திரும்பினர்

(மாவிட்டபுரம்)

மாவிட்டபுரத்துக்கு தமது வீடுகளை பார்க்கச் சென்ற பொதுமக்களை 4 மணி நேரமாக வெயிலில் நிற்க வைத்து பின்னர் ஊரடங்குச்சட்டம் போடப்பட்டுள்ளது என்று கூறி இராணுவத்தினர் திருப்பி அனுப்பினர்.

மாவிட்டபுரம், வீமன்காமம் மற்றும் அயலடுத்த கிராமங்களைச் சேர்ந்த பொதுமக்கள் சுமார் 150 பேர் தமது வீடுகளைப் பார்வையிடுவதற்காக மாவிட்டபுரம் சந்திக்கு அண்மையிலுள்ள இராணுவ தரிப்பிடத்திற்குச்சென்று அனுமதி பெறுவதற்காக காத்து நின்றனர்.

காலை 8 மணியளவில் அங்கு சென்ற மக்களை அடையாள அட்டைகளை பரிசீலனை செய்த பின் நண்பகல் 11 மணிவரை இராணுவத்தினர் அங்கேயே நிற்கும படி பணித்தனர்.

பொதுமக்களும், அவர்கள் கொண்டு சென்ற வாகனங்களும் அங்கேயே காத்து நின்றன.

பின்னர் வீடுகளைச் சென்று பார்வையிடுமாறு பொது மக்களுக்குக்கூறிய இராணுவத்தினர் சில நிமிடத்தில் "ஊரடங்குச் சட்டம் போடப்பட்டுள்ளது. கெதியாய் திரும்பிப் போங்கள்" என்று கூறி மக்களை திருப்பி அனுப்பினர்.

## நயினையில் அன்னதானம்

[யாழ்ப்பாணம்]

நயினை ஸ்ரீநாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபையார் அம்பாளைத் தரிசிக்கவரும் அடியார்கள் அனைவருக்கும் சிறந்த முறையில் அன்ன தானம் கொடுப்பதற்கு ஏற்ற ஒழுங்குகளை செய்து, சபையின் அமுதசுரபி மண்டபத்தில் அன்னதானம் வழங்கிவருகின்றனர்.

அமுதசுரபி மண்டபத்தில் அன்னதானம் நடைபெறுவதாக சபையின் செயலாளர் திரு. பரமலிங்கம் தெரிவித்துள்ளார்.

## நீண்டநாள் சைக்கிள் திருட்டு அம்பலம்

மண்டைதீவு, செவ்

நல்லூர் கந்தசாமி கோயிலில் அடிக்கடி நடைபெற்றுவந்த சைக்கிள் திருட்டைக் கண்டுபிடிக்கப் பொதுமக்கள் எடுத்த நடவடிக்கை உடனடியாகக் கைகூடியது.

சைக்கிள் ஒன்றைப் பூட்டாமல் கோவிலடியில் வைத்துவிட்டு ஆலயத்தினுள் ஒருவர் செல்ல இதைக் கண்ணுக்கெட்டிய தூரத்தில் நின்ற பொதுமக்கள் சிலர் காவல் செய்துகொண்டிருந்தனர்.

சில நிமிடநேரத்தில் அந்தச் சைக்கிளைத் திருட முற்பட்ட ஒரு ஆசாமி கையும் மெய்யுமாகப் பிடிபட்டார். பின்னர்விசாரணைக்காக இளைஞர் குழு ஒன்றிடம் இந்நபர் ஒப்படைக்கப்பட்டார். முன்பு காணமல் போன வேறு பல சைக்கிள்களும் இவர்மூலம் அகப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

## ராஜீவ்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யிருப்பதாகவும், இந்தயோசனைகள்பற்றி ஏற்கனவே சென்னையிலுள்ள தமிழர் குழுக்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் கொழும்பில் விஷயமறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த யோசனைகள்பற்றி ஆராய்வதற்கு முன் டிசம்பர் 19ம் திகதிநிலைகளுக்கு அரசபடைகள் திருப்பவேண்டுமென தமிழர் குழுக்கள் தெரிவித்திருப்பதரகவும் கூறப்படுகின்றது.

இதேவேளை இந்திய அரசு தெரிவித்துள்ள புதியயோசனைகள்பற்றிய இலங்கை அரசின் முடிவுஅறிவிக்கப்பட்டு அவை பேச்சுவார்த்தைக்கு ஏற்றவையாக ஏற்றுக்கொள்ளப்படும் வரைக்கும்அவைகளை பகிரங்கப்படுத்துவதில்லையென்று இரு தேச அரசுகளும்ஒப்புக்கொண்டிருப்பதாகவும் கூறப்படுகின்றது.

ராஜீவ் காந்தியின் கடிதத்துக்கு இலங்கைஅரசு கொடுக்கவிருக்கும் பதில்களைப் பொறுத்தே போராளிகளைப் பேச்சுவார்த்தைக்கு அழைப்பது பற்றிய முடிவு எடுக்கப்படமுடியும் என இந்திய வட்டாரங்களில் கருதப்படுகின்றது


இதேவேளை இன்று அமைச்சர்களுடன் ஜனாதிபதி ஆலோசனைகளில் கலந்ததின் பின்னர் உருவாக்கும் தமது பதில் குறித்து தேசிய அரசியல் கட்சித் தலைவர்களையும் அழைத்து விளக்குவார் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஆ)

## 'ஐலன்ட் பிரைட்' இன்று புறப்படுகின்றது

(சென்னை)

வடபகுதி மக்களுக்கான இந்திய நிவாரணப் பொருள்களை ஏற்றிக்கொண்டு 'ஐலன்ட் பிரைட்' என்னும் இந்திய கப்பல் இன்று சென்னை துறைமுகத்திலிருந்து காங்கேசன் துறையை நோக்கிப் புறப்படுகின்றது.

இக்கப்பலில் இந்திய உணவுக் கார்ப்பரேசனின் தென் பிராந்திய மேளாளர் திரு. ஜி டி. சர்மாவும், வரவுள்ளார்



நெல்லியடி ராணுவ முகாம் தகர்ப்பில் வீரமரணமடைந்த புலிகளின் சிரேஷ்ட உறுப்பினர் 'பிளக் டைகர்' மேஜர் கமல்.

## வடமராட்சி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பனங்களும் மூவாயிரம் ரூபா நிதியுதவி செய்ய முன்வந்துள்ளன.

மேலும் பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 70 வீடுகளும் கரவெட்டி அரச அதிபர் பிரிவில் 125 வீடுகளும் சேதமடைந்திருப்பதாக தேசிய வீடமைப்பு அதிகார சபை புனர்வாழ்வு அமைச்சுக்கு அறிவித்துள்ளது.

## முதுகலைமாணி பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழகத்தின் 1987ம் ஆண்டிற்கான முதுகலைமாணி தொடக்க நிலைப்பரீட்சைக்கான விண்ணப்பங்களை பரீட்சார்த்திகள் இம் மாதம் 31ம் திகதிக்குமுன் யாழ் பல்கலைக்கழக கலைப்பீடத்திற்கு அனுப்பிவைக்கவேண்டும்.

இவ்வாறு யாழ் பல்கலைக்கழகக் கலைப்பீடாதிபதி பேராசியர் நா. பாலகிருஷ்ணன் அறிவித்துள்ளார்.

சகல பரீட்சார்த்திகளுக்கும் பரீட்சைக்கான விண்ணப்பப் படிவம்தபால்மூலம் அனுப்பிவைக்கப் பட்டுள்ளதாகவும் பேராசிரியர் பாலகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

## தொழிலாளர் பாதிப்பு

[புங்குடுதீவு நிருபர்]

புங்குடுதீவு பகுதிகளில் கட்டிடத்தொழில் செய்துவரும் சுமார் ஆயிரத்திற்கும் அதிகமான குடும்பங்கள் இன்றைய நெருக்கடிநிலையில் பெருந்துன்பத்தின் மத்தியில் உணவு வசதியின்றி பெரும் பட்டினிச் சாவை எதிர்நோக்கியுள்ளனர்

யாழ். காங்கேசன்துறை சீமெந்துத்தொழிற்சாலை கடந்த பல மாதங்களாக செயலிழந்திருப்பதால் யாழ் குடாநாட்டிலும் தீவுப்பகுதிகளிலும் சிமெந்துக்கு பெருந்தட்டுப்பாடு நிலவிவருவது தெரிந்ததே.

கம்யூனிஸ்ட் இலட்சியங்களை-------

# போராட்டங்கள் மூலமே வென்றெடுக்க முடியும்

## வைத்திலிங்கம் கூறுகிருர்

(யாழ் - செவ்)

''கம்யூனிஸ்ட் இலட்சியங்கள் மகத்தானவை அவற்றை வென்றெடுக்கும் வழி சுருக்கமானதல்ல - குறிப்பிட்ட வழிமுறைகள் மூலம், திட்டமிடப்பட்ட போராட்டங்கள் மூலமுமே அவற்றை வென்றெடுக்க முடியும்.''

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் 44 வது ஆண்டு நிறைவைக் குறிக்குமுகமாக இக் கட்சியின் யாழ் மாவட்டக்குழுவினல் நடத்தப்பட்ட பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய திரு. அ. வைத்திலிங்கம் இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாவட்டக்குழுவின் பதில் செயலாளர் திரு. க. நவரத்தினம் கூட்டத்திற்கு தலைமை வகித்தார்.

திரு. வைத்திலிங்கம் தொடர்ந்து உரையாற்றுகையில்:

'இலங்கையின் சரித்திரத்தில் இனவாதம் எப்போதும் இருந்து கொண்டே வந்திருக்கிறது இப்போது அது என்றுமில்லாதவாறு தலையெடுத்து, தன்னை வளர்த்த யூ என். பி. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகியவற்ருல் கூட கட்டுப்படுத்த முடியாத நிலையை அடைந்துள்ளது'' என்று கூறிஞர்.

திரு. நவரத்தினம் தமதுரையின்போது, கட்சி தன்னுடைய நாற்பத்தைந்தாவது ஆண்டிற்குள் மகத்தான வளர்சசியை அடைந்து விடும் என்பதில் சந்தேகமில்லை. மாக்ஸிய சித்தாந்தத்தைச் சரிவரப் புரிந்து கொண்ட இளைஞர்கள் எதிர்காலத்தில் எம்முடன் பெருமளவில் சேர்வார்கள் என்ற நம்பிக்கை எமக்குண்டு எனக் குறிப்பிட்டார்

க. திருநாவுக்கரசு தமதுரையின் உண்மையான ஜனநாயகம் எவ்விதத்திலும் காக்கப்பட வேண்டும். ஜே. ஆர். ஜனநாயகம் அல்ல; பொதுமக்கள ஜனநாயகமே முக்கியமானது என்ற மக்கள் போராட்டத்தில் கம்யூனிஸ்ட் கட்சி முன்னின்றுழைக்கும் எனக்கூறிஞர்.

தோழர் சாந்தன் தனது நன்றியுரையின்போது, இன்றைய யதார்த்தங்களைக் கணக்கில் எடுக்கும்போது, சோவியத் எதிர்ப்பு நிலைப்பாட்டை எடுக்கும் ஒருவன், உண்மையான சோஷலிசவாதியாக இருக்க முடியாது எனக் குறிப்பிட்டார்.

---

குறுகியகால ————

# பொது விவசாய பயிற்சித் திட்டம்

(மண்டைதீவு நிருபர்)

திருநெல்வேலியில் உள்ள யாழ் மாவட்ட விவசாயப் பயிற்சித் திட்டத்தின் கீழ் அடுத்த மாதம் ஆரம்பமாகவிருக்கும் நான்கு மாத காலப் பொது விவசாயப் பயிற்சி நெறிக்கு பயிற்சியாளர்களைத் தெரிவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

இப்பயிற்சிக்கான விண்ணப்ப முடிவுத்திகதி இம்மாதம் 18ம் திகதியென அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பயிற்சிக்கு முப்பது யுவதிகள் தெரிவு செய்யபபடவிருக்கின்றனர்.

இந்த இலவச பயிற்சி நெறிக்கு தெரிவு செய்யப்படும் பயிற்சியாளர்களுக்கு தங்குமிடவசதியும் பயிற்சிக் காலத்திற்கான உதவியும் வழங்கப்படவுள்ளன.

மனையியல், கைப்பணி. தையல் போன்ற பெண்களுக்கான விஷேட பயிற்சிகளும் இந்த விவசாயப் பயிற்சி நெறியில் சேர்க்கப்படவுள்ளதாக இப்பண்ணையின் முகாமையாளர் திரு. ப. தருமலிங்கம் தெரிவித்தார்.


LONDON EXAMS

(Nov./Dec. '87)

ஆரம்பம்: 11-7-87

I. C. M. A. (Cima)

Stages I & II

A. A. T.

Prelim.

விரிவுரையாளர் குழு:

V. கருணநிதி

S. P. சிவஞானம்

S. சிவபாலன்

மற்றும் பிரபல பல்கலைக்கழக விரிவுரையாளர்கள்

குறிப்பு: ஒவ்வொரு பகுதிக்கும் ஆகக் குறைந்தது 500 விரிவுரை மணித்தியாலங்கள் எடுக்கப்படும்

விபரங்களுக்கு:

RAPID RESULT INSTITUTE

212, கச்சேரி — நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

[ஏ 111]


## புதிய சட்டத்தரணி



கைதடி தெற்கு நாகரத்தினம் குணபாலசிங்கம் உயர் நீதிமன்ற புதிய சட்டத்தரணியாக உயர் நீதிமன்ற நீதியரசர்களான ஆர். எஸ். வனசுந்தரா, எம். எச். பி அல்விஸ் ஓ எஸ் எம். செனிவிரத்தின ஆகியோர் முன்னிலையில் அண்மையில் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார்.

இவர் பன்னலை, தெல்லிப்பழை காலஞ்சென்ற தபால் அதிபர் செல்லையா நாகரத்தினத்தின் அன்பு மகனுவார். பன்னலை சேர் கனகசபை வித்தியாசாலை, தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவரும். கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்டப் பட்டதாரியுமான இவர் தற்போது யாழ். வடக்கு கட்டிடத் திணைக்களத்தில் தொழில் நுட்ப உத்தியோகத்தராகக் கடமை புரிகிருர்.

---

## 15,000 ரூபா ஒதுக்கீடு

(கொழும்புத்துறை)

யாழ் மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் பாஷையூர் விளையாட்டு மைதானத்தைப் புனரமைத்து விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்கும் முகமாக 15,000 ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது.

இவ் விளையாட்டு மைதானம் பாஷையூர் புனித அந்தோனியார் இளைஞர் கழக அங்கத்தவர்களினல் சீரமைக்கப்பட்டு வருவதாகவும், சுமார் இருபது இளைஞர்கள் விளையாட்டு மைதானப் புனரமைப்பு வேலைகளில் ஈடுபட்டு வருவதாகவும் யாழ். மாவட்ட இளைஞர் சேவை அலுவலர் திரு. கே. எஸ். கார்த்தி தெரிவித்தார்

---

கடையிற்சுவாமி கோவிலில்————

# தட்சிணமூர்த்தி நவக்கிரகம் கும்பாபிஷேகம்

கடையிற்சுவாமிகள் நேர் சீடர் நல்லூர்ச் செல்லப்பாச் சுவாமிகள். அவர் சீடர் சிவயோகசுவாமிகளாவர்.

குழந்தைவேற்சுவாமிகள், அவர் சீடர் அருளம்பல சுவாமிகள் முதலியோரும் கடையிற்சுவாமிகளின் சீட பரம்பரையினராவர். கடையிற்சுவாமிகள் 1891 ஆம் ஆண்டு மகாசமாதி அடைந்தார்கள். அவரின் சமாதிச் சிவாலயம் இயற்கை அழகு ததும்பும் சூழலில் வண்ணை நீராவியடியில் அமைந்துள்ளது. அங்கு கோயில் கொண்டு அருள்பாலிக்கும் சிவலிங்கப் பெருமானுக்கு வைத்தீஸ்வரன் என்பதும் அம்பாளுக்கு வாலாம்பிகை என்பதும் திருநாமங்கள்.

### பருளாய் விநாயகன்

கடையிற்சுவாமிகளின் திருவருளை நேரடியாக இன்றும் பெற இத்திருத்தலம் எம்மவரைப் பெருமைப்படுத்தும் புண்ணியத்தலம் என்பதை நன்கு உணர்ந்த மெய்யடியார்களின் பொருளுதவியின் துணைக்கொண்டு பாராட்டத்தக்க வகையில் பரிபாலனசபையினர் செயற்பட்டு வருகின்றனர்.

இப்பொழுது புதிதாகத் தட்சிணமூர்த்தி கோயிலும் நவக்கிரகங்களின் கோயிலும் ஏற்பட்டுள்ளன. மிகச் சிறந்த முறையில் பூசை வழிபாட்டு நிகழ்ச்சிகள் நடந்துவரும் இத்திக்கோயிலில் சிவஞானயோக நெறி நின்று நிட்டை கூடுபவர்களுக்குத் தட்சிணமூர்த்தி திருக்கோயில் பெரிது உதவுவது மட்டுமன்றிச் சைவ சமயிகள் அனைவரும் நல்லுணர்வு பெறவும் வாய்ப்பு உண்டாம். இதனுல் அடியார்கள் பலர் கடையிற் சுவாமிகள் வாழ்ந்து காட்டிய சமயாதீத நிலை பெற்று வாழ்தல் எளிதாகும்.

சாதாரண உலகியல் வாழ்வில் தோய்ந்தவர்களுக்குச் கோள்களால் ஏற்படும் தோஷங்களை நீக்கி நல்வாழ்வு பெற நவக்கிரககோயில் வழிகாட்டும்.

''கங்கைமதி கொளிறை
யணி கண்ணுதலினுன்றன்
பங்கயப் பொற்பாத மலர்
சிந்தை பணி செய்து
செங்கை குவித்து ஆடித்
தினம் தேடும் அடியாரை
மங்குபிணி வன்பிறவி வந்து
நலியாதே''

என்பது குழந்தைவேற்சுவாமி அருளிய திருப்பாடலாகும்.

---

பிரதிஅமைச்சரை சந்திக்க உதவிய————

# நீதிபதிக்கு சந்தேகநபர்நன்றிகூறிஞர்

[நமது நிருபர்]

பிரதி நீதியமைச்சர் தம்மைச் சிறையில் வந்து சந்திக்கவும், தமது உயிருக்கு உத்தரவாதமளிக்கவும் உதவியமைக்காக பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள மட்டக்களப்பைச் சேர்ந்த சந்தேகநபர் ஒருவர் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி திரு.ரி சுந்தரலிங்கத்துக்கு நீதிமளிறத்தில்வைத்து நன்றி தெரிவித்துக்கொண்டார்.

மட்டக்களப்பு அதிகார் வீதியைச்சேர்ந்த பெனடிக்ட் ஸ்ரீ பத்மன் என்பவரே சந்தேக நபராவார்.

கடந்த தவணையின்போது தனது உயிர் பாதுகாப்பு உட்பட தனக்குள்ள சில மனக்குறைகள் தொடர்பாக சிறைச்சாலை ஆணையாளருடன் தொடர்புகொள்ள வேண்டி கடிதங்கள் எழுதியதாகவும் அதற்கு பதில் கிடைக்காததால் சந்திப்புக்கு ஏற்பாடு செய்து தருமாறு நீதிபதியை ஸ்ரீ பத்மன் கேட்டிருந்தார். சிறைச்சாலை ஆணையாளர் விரும்பாத போது அவரைச் சந்திப்பதில் பயன் இல்லை. என்றும் அவருக்கும் மேலாக உள்ள பிரதி நீதியமைச்சருடன் தொடர்பு கொள்வதே மேல் என்றும் எதிரியின் முறைப்பாட்டு பிரதியை பிரதி அமைச்சருக்கு அனுப்பி வைப்பதாகவும் நீதிபதி கூறி இருந்தார்.

3-7-84 இல் இந்த வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது நீதிபதிக்கு ஸ்ரீ பத்மன் நன்றி தெரிவித்து கூறியதாவது:

பிரதி நீதியமைச்சர் திரு. ஷெல்டன் ரணராஜாவை சிறைச்சாலையில் வைத்து சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. அவரிடம் எனது பிரச்னைகளை எடுத்துக் கூறினேன் எனது உயிர் பாதுகாப்பிற்கு அவர் உறுதி அளித்தார். இந்த சந்திப்பு கிடைக்க உதவிய தங்களுக்கு எனது நன்றி பிரபு

ஸ்ரீபத்மனுக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட வழக்குள் உள்ளன. தன்னை விசாரிப்பதற்கு இந்த நீதிமன்றத்திற்கு அதிகாரம்இல்லை என்றும் சர்வதேச நீதிமன்றத்திலேயே தனது வழக்கு விசாரிக்கப்பட வேண்டும் என்றுகூறி அனைத்து வழக்குகளிலும் குற்றப்பத்திரிகைகளை ஏற்கவும் அவர் மறுத்துள்ளார். மேலும் தனக்கு தானே வாதாடவும் செய்கிருர்.

இந்த வழக்கில் 8 - 6 - 83 ல் அல்லது அதற்கு முன்னுல் ஒரு திகதியில் மட்டக்களப்பு கல்வித் திணைக்களத்திற்கு சொந்தமான வாகனம் ஒன்றிற்கும் சேதம் ஏற்படுத்தியதாக ஸ்ரீபத்மன்மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

வழக்கு அடுத்த மாதம் 26-ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

---

## உப அஞ்சலகம்

நெல்லியடி, செவ்

சேதமுற்ற வதிரி உப அஞ்சலகம் திருத்தம் நடைபெறும் வரை மாலிசந்திக்கு அண்மையிலுள்ள ஒரு கட்டடத்தில் தற்காலிகமாக இயங்கி வருகிறது.

---

## செஞ்சிலுவைச்சங்க பிரதிநிதிக்கு வரவேற்பு

[அச்சுவேலி நிருபர்]

வலி கிழக்குப் பகுதியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உணவுப் பொருள்கள் விநியோகத்தை மேற்பார்வையிடுவதற்கு வருகை தந்திருந்த இந்திய செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிக்கு மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது.

இந்திய செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதி வலி கிழக்கில் உணவுப்பொருள் விநியோகம் நடைபெற்ற ஆறு நிலையங்களுக்கும் சென்று குத்துவிளக்கேற்றி உணவுப் பொருள் விநியோகத்தை ஆரம்பித்துவைத்தார்.

உணவுப் பொருள்கள் விநியோகத்தில் கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் திரு. கே. குலேந்திரா, உதவி அரசாங்க அதிபர் அலுவலக உத்தியோகத்தர்கள், அச்சுவேலி, நீர்வேலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க ஊழியாகள், இயக்குநர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

யாழ். உள்ளூராட்சிமன்ற தேர்தல்

# வேட்புமனு தாக்கல் செய்ய மீண்டும் அவகாசம்

## 28-ந் திகதி இறுதி நாள்

யாழ்ப்பாணம், புதன் கல் செய்யலாமென யாழ்.
யாழ். மாவட்டத்திலுள்ள மாவட்ட உதவித் தேர்தல்
பிரதேச, மாநகரசபைகளுக் ஆணையாளர் திணைக்களம்
கான தேர்தல் நியமனப் பத் அறிவித்துள்ளது.
திரங்கள் மீண்டும் இம்மாதம் யாழ். மாவட்டத்தில்
28-ம் திகதி வெள்ளிக்கிழமை உள்ள 12 பிரதேச சபைகளு
நண்பகல் 12 மணிவரை தாக் க்கும், மூன்று நகரசபைகளுக்

கும், ஒரு மாநகர சபைக்குமான தேர்தலுக்குரிய கட்டுப்பணம் இம்மாதம் 21-ம் திகதியிலிருந்து 27-ம் திகதி நண்பகல் 12 மணிவரை செலுத்தலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (வா)

## இன்றைய பலன்

மாதம்: ஆனி
திகதி: 24 (8-7-1987)
கிழமை: புதன்
திதி: துவாதசி
நட்சத்திரம்: அனுசம்

மேடம்: அடுத்துக் கெடுப்பதற்கும் எதிரிகள் முனைவர். அன்னியர் பகையுமுண்டாம். உள்வீட்டிலேயே பூசல்கள் தோன்றும்

இடபம்: உறவு முறைகள் பலப்படும் தொழில் துறையிலும் புதிய உத்வேகம் பிறக்கும். கண்ணியமான வாழ்வுமுண்டாம்.

மிதுனம்: கௌரவத்தைப் பாதிக்கக் கூடிய சம்பவங்கள் இடம்பெறும். சிறுவிபத்தும் உண்டாம் பிரயாணத்தைப் பின் போடவும்.

கடகம்: தருமகாரியங்களில் ஈடுபடுவீர்கள். அபிப்பிராய பேதங்கள் மறையும் உற்சாகமாக நாளைக் கழிப்பீர்கள்.

சிங்கம்: இலட்சியப் பாதையில் வீறுநடை போடுவீர்கள். வாழ்விலும் ஒளிவீசும் வாகன சுகமுமுண்டாம்.

கன்னி: அன்னிய வாசம் உண்டாம் அன்னியர் உதவியுண்டாம். கடமையிலும புதிய உந்வேகம் பிறக்கும்.

துலாம்: நிதியில் முடக்கம் ஏற்படும் விஷமிகளின் தொல்லைகள் அதிகரிக்கும் குடும்பத்திலு பிணிகள் உருவெடுக்கும்.

விருச்சிகம்: குறுக்கு வழிகளில் இறங்கவேண்டாம் கடன்படவும் நேரிடும் எதிலும் முன்யோசனை நன்று.

தனுசு: அறிவுத்தாகம் மேலோங்கும் ஆனந்த வாழ்வுமுண்டாம். நண்பர்கள் உதவியுண்டாம்.

மகரம்: எண்ணியதில் தடைகடன் தொல்லைகள் அதிகரிக்கும். எதிலும் பொறுமையைக் கடைப் பிடிக்கவும்.

கும்பம்: மாதுரு வழியாலும் மனைச்சிறப்புண்டு பிறர் ஆதரவுண்டு நினைத்ததில் ஜெயம் காண்பீர்கள்.

மீனம்: பணபலமுமுண்டாம். இனபந்துக்கள் கூடுவர். கூட்டு வியாபாரத்தில் லாபமுண்டாம்.

திருமலை
வே. ரவீந்திரன்

## அகதிகளுக்கு அன்பளிப்பு

(பண்டத்தரிப்பு நிருபர்)
சங்கானையிலுள்ள அகதிகள் முகாம்களுக்குச் சென்று பார்வையிட்ட யாழ் மில்க் வைற் தொழிலக அதிபர் திரு க. கனகராசா சிறுவர்களுக்கு அப்பியாசக்கொப்பிகள் வாய்ப்பாட்டுமட்டைகள் மற்றும் பிரசுரங்களை அன்பளிப்பு செய்தார்.

## தற்காலிக ஊழியர்களுக்கு சம்பளம்இல்லை

யாழ்ப்பாணம் புதன்
காங்கேசன்துறை லங்கா சிமென்ற் லிமிட்டெட்டில் பணிபுரிந்த தற்காலிக ஊழியர்களுக்கு கடந்த மாதச் சம்பளம் வழங்கப்படவில்லை.

கடந்த மாதச் சம்பளத்தை எடுப்பதற்கென மேற்படி அலுவலகத்திற்கு சென்ற பொழுது மேலிட உத்தரவு இன்றி இந்தச் சம்பளம் வழங்கப்படமாட்டாது என்று அங்கிருந்த உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தாராம்.

லங்கா சிமென்ற் லிமிட்டெட் மூடப்பட்டிருந்த போதிலும், அங்கு பணிபுரிந்த தற்காலிக ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கப்பட்டு வந்தது. ஆனல் கடந்த மாதச்சம்பளம் மாத்திரம் வழங்கப்படவில்லை.

இதேவேளை லங்கா சிமென்ற் லிமிட்டெட் ஜப்பானிலிருந்து சிமென்ற் இறக்குமதி செய்து விற்பனைசெய்து இதில் கிடைக்கும் வருமானத்தில் இவ்வூழியர்களுக்கு சம்பளம் வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருவதாகவும் தெரியவருகிறது. (கு)

## சேரன் நெதர்லாந்து பயணம்

யாழ்ப்பாணம், புதன்
யாழ்ப்பாணத்தின் இளம் பத்திரிகையாளரும் பிரபல கவிஞருமான சேரன் உயர் கல்விக்காக நெதர்லாந்து பயணமானுர்.

யாழ் பல்கலைக்கழக விஞ்ஞான பட்டதாரியான திரு. சேரன் முன்னுள் மேலதிகஅரச அதிபர் திரு. உருத்திரமூர்த்தியின் [மகாகவி] புதல்வராவார்.

நாடகத்துறை கவிதைத் துறையில் தீவிரமாகஈடுபட்டிருந்த சேரன் 'சட்டர்டே றிவியூ' பத்திரிகையில் உதவி ஆசிரியராக கடமையாற்றினுர். [ஊ]

## அகதிகளுக்கு போஷாக்கு உணவு

[பண்டத்தரிப்பு நிருபர்]
சங்கானை கலாசார மண்டபம், கிராம நீதிமன்றம், விக்கினேஸ்வர வித்தியாலயம், சிவப்பிரகாச மகாவித்தியாலயம் ஆகிய இடங்களில் தற்போது தஞ்சமடைந்திருக்கும் அகதிகளுக்கு தினசரி காலையில் போஷாக்குமிக்க இலைக்கஞ்சியும்,பால்மாவும் வழங்கப்பட்டு வருகின்றன.

போரூட், றெட்பானு, சர்வோதயம், குழந்தைகள் பாதுகாப்பு நிதியம் ஆகிய நிறுவனங்களின் ஒன்றிணைந்த நிவாரண நிறுவனம் இந்த போஷாக்கு உணவுகளை மேற்படி அகதிகள் முகாம்களிலுள்ள சிறுவர்கள், கர்ப்பிணிகள் மற்றும் போஷாக்கு குறைந்தவர்களுக்கு இப்போஷாக்கு உணவுகளைத் தினமும் வழங்கிவருகின்றது. செல்வி சரோஜாதேவி கந்தசாமி இதற்கு பொறுப்பாகக் கடமையாற்றிவருகிறார்.

## பொதுக்கூட்டம்

பண்டத்தரிப்பு, செவ்.
சங்கானை அகதிகள் புனர்வாழ்வு அமைப்பின் விசேஷ பொதுக்கூட்டம் எதிர்வரும் 12ம் திகதி சங்கானை பட்டின பொதுநூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

## மின் தடை

[ஒட்டுசுட்டான் நிருபர்)
தண்ணீரூற்று, முள்ளியவளை ஒட்டுசுட்டான், ஆகிய பகுதிகள்அடிக்கடிஇருளில் மூழ்குகின்றன.

சட்டவிரோத மின் பாவனையாலேயே இவ்வாறு மின் தடை ஏற்படுவதாக கூறப்படுகிறது.

## தெல்லிப்பழை ஆஸ்பத்திரிக்கும் இந்தியமருந்துகள்

பலாலி, செவ்.
பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்தியா அரசால் அனுப்பிவைக்கப்பட்ட மருந்து வகைகளின் ஒரு பகுதி தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலைக்கும் வழங்கப்பட்டுள்ளது.

தீவுப்பகுதி

## விவசாயிகள் கவனத்திற்கு

வேலணை, செல்.
வேலணை கம நலச் சேவை பகுதியைச் சேர்ந்த மண்டைதீவு, மண்கும்பான், அல்லைப்பிட்டி, ஊர்காவறுறை, எழுவைதீவு,அனலைதீவு, ஆகிய பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் எதிர்வரும் காலபோகத்தல் தாங்கள் மேற்கொள்ளவிருக்கும் நெல் செய்கையின் விபரங்களையும் விதை நெல்லின் தேவை, பெயர், விலாசம், விதை நெல்லின் இனம், தேவையான அளவு என்பவற்றைக் குறித்து எதிர்வரும் 20-ம் திகதிக்குமுன் வேலணையில் உள்ள விவசாயப்போதனாசிரியருக்கு விண்ணப்பிக்குமாறு விவசாயப் போதனாசிரியர் திருமதி பு. சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

## நோயாளர் அச்சம்

[அச்சுவேலி நிருபர்]
அச்சுவேலி அரசினர் வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெறுவதற்கு நோயாளர்கள் தயங்குகின்றனர்.

அச்சுவேலி அரசினர் வைத்தியசாலை கடந்த மாதம் ஷெல் தாக்குதலுக்கு இலக்காகி சேதமடைந்ததையடுத்து சிலதினங்கள் செயற்படாமல் இருந்து வந்தது.

தற்பொழுது வைத்தியசாலை வழமைக்குத் திரும்பியுள்ள போதிலும் நோயாளர்கள் தங்கியிருந்து சிகிச்சை பெறுவதற்கு தயங்குகின்றனர்.

பலாலி வசாவிளான் வளலாய் இராணுவ முகாம்களில் இருந்து ஷெல் தாக்குதல்கள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுவதாலும் தொடர்ந்து குண்டுவெடிப்புச் சத்தங்கள் கேட்பதாலுமே நோயாளர்கள் அச்சமடைகின்றனர்.

# யுத்தகளம்போல் மாவிட்டபுரம்

## இந்நிலையில் உற்சவத்தை எவ்வாறு நடத்துவது என்கிறுர் ஆதீனகர்த்தா

(மாவிட்டபுரம் நிருபர்)
"யுத்தகளம் போல் இடிந்த வீடுகளும், முறிந்த மரங்களும், எல்லைகளற்ற பிரதேசங்களுமாக மாவிட்டபுரமும், அதனைச் சூழ்ந்த கிராமங்களும் காட்சி தருவதாலும், மாசுபட்டிருக்கும் ஆலயச்சூழலை துப்பரவு செய்ய குறைந்தது ஒரு மாதகாலம் பிடிக்கு மாதலாலும் அங்கு இடம்பெற்ற வேறு பல அசம்பாவிதங்களை சீர்செய்ய வெகுகாலமெடுக்குமாதலாலும் மாவை ஆலய உற்சவம் இம்முறை றுத்தப்பட்டுள்ளது:"

இவ்வாறு மாவைக்சந்தன் ஆலய உற்சவம் நிறுத்தப்பட்டது குறித்து ஆதீன கர்த்தா மகாராஜ ஸ்ரீ சு து. ஷண்முகநாதக்குருக்கள் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

மேற்படி ஆலய உற்சவம் நிறுத்தப்பட்ட போதும் தமது வீடுகளை பார்வையிட அப்பகுதிக்குச்சென்ற பொதுமக்கள் ஆலயத்திற்குச்சென்று தரிசனம் செய்து வந்தனர்.

உற்சவம் நிறுத்தப்பட்ட போதும் வழமையாக விரதம் அனுஷ்டிப்போர் இம்முறையும் விரதம் அனுஷ்டித்து வருகிறுர்கள்.

யாழ், வாசிகளிடம்------

# கொழும்பில் கொள்ளையடித்த பணம் உடன் மீட்பு!

## நலன்காக்கும் குழு நடவடிக்கை

(கொழும்பு)
யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு சென்றிருந்த தமிழர் இருவரிடம் கத்திமுனையில் கொள்ளையடிக்கப்பட்ட பணம் அப்பகுதியில் இயங்கும் நலன் காக்கும் குழுவினுல் மீட்டுக் கொடுக்கப்பட்டதாம்.

கொச்சிக்கடையில் இடம்பெற்ற இச் சம்பவம் பற்றி தெரியவந்துள்ளதாவது:

கொழும்பு சென்றிருந்த சொழும்புத்துறையையும், குருநகரையும் சேர்ந்த இருவரும் யாழ். திரும்புவதற்காக கோட்டை புகையிரத நிலையம்நோக்கி வந்து கொண்டிருந்த போது 'கிறிஸ்'கத்திகளுடன் இவர்களை இடைமறித்த மூன்று கொள்ளையர்கள் இவர்களிடமிருந்த இரண்டாயிரத்துத்தொளாரம் ரூபாயை பறித்துச் சென்றனர். யாழ் திரும்புவதற்குப் பணமில்லாத நிலையில் தாம் தங்கியிருந்த இடத்திற்குத் திருப்பிச் சென்ற இவர்கள் அப்பகுதியில் இயங்கும் தமிழர், சிங்களவர் நலன் காக்கும் குழுவிடம் புகார் செய்தனராம். இச்சம்பவம் நடந்த இடத்திற்குவிரைந்து சென்ற மேற்படி குழு உறுப்பினர்கள் இக்கொள்ளையில் ஈடுபட்ட கொள்ளையர்களைத் தேடிப்பிடித்து பணமும் மீட்கப்பட்டு உரியவர்களிடம் திருப்பி ஒப்படைக்கப்பட்டது இக்குழுஉறுப்பினர்கள் இருவரையும பாதுகாப்பாக புகையிரத நிலையம் அனுப்பிவைத்தனர். (ம. நி.)

## இலவச மருத்துவ சேவை

யாழ்ப்பாணம். புதன்
பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தில் மீண்டும் இலவச மருத்துவ சேவை நடாத்தப்படவுள்ளது.

12ம் திகதி ஞாயிறு காலை 9 மணி தொடக்கம் 10 மணி வரை இம் மருத்துவ சேவை நடைபெறவுள்ளதாகவும் இனிமேல் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் மருத்துவ சேவை நடைபெறவிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கணேசன் ஸ்டோர்ஸ்
இல. 11, கஸ்தூரியார் லேன்,
யாழ்ப்பாணம். (கன்ஞதிட்டிக்கு அருகாமை)
சகல பிடவை வியாபாரமும் வழமைபோல தொடர்ந்து நடைபெறுகின்றன. [ஏ 150]

அறிவித்தல்

நாவற்குழி கண்ணுடித் தொழிற்சாலை வேலைகள் அரியாலை அரஸ்கோ கட்டடத்தில் விரைவில் ஆரம்பமாக உள்ளன. நாவற்குழி தொழிற்சாலையில் கடமையாற்றிய சகல ஊழியர்களையும் இம்மாதம் 11ம்திகதி சனிக்கிழமைக்கு முன்னதாக அரியாலை கண்டி வீதியில் அமைந்துள்ள புதிய தொழிற்சாலைக்கு சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

த பெனின்சுலா குறூப்
மகேந்திரா கண்ணுடி தொழிற்சாலை
அரஸ்கோ கட்டிடம்
163, கண்டி வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.
[சி 9753]

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

புதன்கிழமை 8-7-87

# வீமன்காமம் அதிபர் மரணம்: கொலை எனத் தீர்ப்பு
# ராணுவத்தை கைதுசெய்ய உத்தரவு

யாழ்ப்பாணம், புதன்

வீமன்காமம் பாடசாலை அதிபர் முத்தையா சிவராசாவின் மரணவிசாரணை முடிவில் அவரது மரணம் கொலைஎன தீர்ப்பளித்தயாழ்ப்பாண நீதிவான் சிதம்பரநாதன் இக்கொலைக்கு காரணமான சந்தேகநபர்களான இராணுவத்தினரை கைதுசெய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறு பொலிசாருக்கு உத்தரவிட்டார்.

இவ்விசாரணை யாழ் ஆஸ்பத்திரி பொலிஸ் பிரிவில் நேற்றுக் காலை நடைபெற்றது.

இம்மாதம் 3ம் திகதி பாடசாலைக்குச்சென்ற வீமன்காமம் பாடசாலை அதிபர் மாவிட்டபுரம்காவலரணிலிருந்த ராணுவத்தினரால் துப்பாக்கியால் சுடப்பட்டு பலத்தகாயத்துடன் ஆபத்தானநிலையில் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு நேற்றுக் காலை ஆஸ்பத்திரியில்மரணமானார்.

இவ்விசாரணையின் போது சாட்சியமளித்த மாவிட்டபுரம் பிரஜைகள்குழு உறுப்பினர் குட்டியன் திருச்செல்வம் தெரிவித்ததாவது: நானும் அதிபரும் கடந்த 2ம் திகதி பாடசாலையில் சிலமுக்கிய தஸ்தாவேஜுகளை எடுப்பதற்காக இருவரும் இரு சைக்கிளில் வெள்ளைக்கொடியுடன் சென்றபோது மாவிட்டபுரம் இராணுவத்தினரின் காவலரணையடைந்ததும் இராணுவத்தினர் எம்மைவருமாறு சைகைகாட்டினார்கள். நாம் உள்ளே சென்றோம். அப்போது இராணுவத்தினர் எம்மை எங்குசெல்கிறீர்கள் எனவினவினர்கள். நாங்கள் பாடசாலைக்கு சிலமுக்கிய தஸ்தாவேஜுகளை எடுப்பதற்காக செல்கின்றோம் என்றும அதற்கான உத்தரவை கல்விக்கந்தோரிலிருந்து பெற்றுவந்துள்ளோம் என்றும் கூறி உத்தரவிற்கானகடிதத்தை அவர்களிடம காண்பித்தோம். அதை வாங்கிப்பார்த்த இராணுவத்தினர் மேலதிகாரியிடம் அனுமதிபெற்றுவருகிறேன். அதுவரை இருங்கள்மனக் கூறிவிட்டு உள்ளேசென்றவர் சிறிது நேரத்தில் திரும்பிவந்து மேலதிகாரி காங்கேசன்துறைக்கு சென்றுள்ளதாகவும், அவர் வந்ததும் உத்தரவு பெற்றுவைப்பதாகவும் கூறி எங்களை நாளைக்கு வருமாறு திருப்பி அனுப்பினர்.

மறுநாள் காலை இருவரும் சைக்கிளில் அங்கு சென்றோம். செல்லும் வழியில் காவலரணிலிருந்து 500 யாருக்கு இப்பால் செல்கையில் காவலரணிலிருந்த இராணுவத்தினர் எம்மைநோக்கி சுட்டனர். சத்தம் கேட்டு நான் இராணுவம் சுடுகின்றது எனக் கூறிக்கொண்டு அதிபரை பார்க்கும்போது அதிபர் 'ஐயோ' எனக் குளறிக்கொண்டு முன்பக்கமாக கீழே சாய்ந்து விழுந்தார்.

அப்போது அவரது வாயால் ரத்தம் வழிந்து ஓடியது. தொடர்ந்து அவர்கள் எமமை சுட்டதால் நானும் கீழேவிழுந்துவிட்டேன். இதேவேளை அதிபரை இழுத்து எடுக்க முயன்றும் எடுக்கமுடியவில்லை பின்னர் நான் எனது சைக்கிளையும் இழுத்துக்கொண்டு பின்னல் வேலியோரமாக சென்று எழுந்து சைக்கிளில் எனது காரியாலயத்திற்குச் சென்று அதிபரை இராணுவம் சுட்டுவிட்டதாகக் கூறினேன்

சுமார் அரை மணித்தியாலத்திற்குப்பின் அதிபரை அம்புலன்சில் ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றுவிட்டனர் என அறிந்தேன்.

பின் என்னைவரும்படி அன்று இராணுவத்தினரிடமிருந்து அழைப்பு வந்தது. நான் பயத்தின் காரணமாக அன்று அங்கு செல்லவில்லை. மறுநாள் 4-ம் திகதி காலை அவர்களிடம் சென்றபோது அதிபர் என்று தெரியாமல் அவரைச் சுட்டுவிட்டோம். அதற்காக மன்னிப்புக்கோருகின்றோம் என்று அங்கிருந்த இராணுவத்தினர் என்னிடம் தெரிவித்தனர்.

நான் அத்துடன் திரும்பி வந்துவிட்டேன். பிரேத பரிசோதனையை டாக்டர் செல்வி கனகரட்ணம் மேற்கொண்டார். இறுதியில் கொலைஎனத் தீர்ப்பளிக்கப்பட்டது. [கு]

## இந்தியஅரசு வேண்டுகோள்

புதுடில்லி, ஜூலை 7

'இலங்கையின் நிலைமைமோசமடையும் வகையில் எந்தத்தரப்பினரும் வன்முறை நடவடிக்கையில் ஈடுபடக் கூடாது' என்று இந்திய அரசு வேண்டுகோள் வடுத்துள்ளது.

## மரண அறிவித்தல்

### திரு. வைத்திலிங்கம் தியாகராசா

கட்டுடையைச் சேர்ந்த வைத்திலிங்கம் தியாகராசா காலமானர். அன்னர் காலஞ்சென்ற ஆறுமுகம் வைத்திலிங்கத்தின் மகனும். V. திருநாவுக்கரசு, காலஞ்சென்ற ஞானரத்தினம் ஆதித்தபிள்ளை ஆகியோரின் சகோதரரும், திருமதி புவனேஸ்வரி திருநாவுக்கரசுவின் மைத்துனரும், திருமதி ராஜமனேகரி, ரட்ணராஜாவின் மாமனுமாவார் அன்னரின் ஈமக்கிரியைகள் [இன்று] '8 07-87 புதன்கிழமை காலை 9-30 மணியளவில் நடைபெற்று தசனக்கிரியைகளுக்காக பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

சி-9754

### நன்னித்தம்பி வன்னியசிங்கம்

சங்குவேலியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், மாவிட்டபுரத்தைப் வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய நன்னித்தம்பி வன்னியசிங்கம் 05-07-1987 அன்று சிவபதமடைந்துவிட்டார். அன்னர் காலஞ்சென்ற நன்னித்தம்பி – அன்னப்பிள்ளையின் சிரேஷ்ட புதல்வரும், சோதிப்பிள்ளையின் அன்புக்கணவரும்,குமரதாசன், நகுலேஸ்வரி, மணிமேகலையின் [ஆசிரியை, தமிழ் மகா விததியாலயம், பூண்டுலோயா] அன்புத் தந்தையும், வீரலக்குமி, சரஸ்வதி, காலஞ்சென்ற வைத்திலிங்க , திருப்பதி [ஆசிரியை] ஆகியோரின் அன்புச் சகோகரரும், பத்மினிதேவி பத்தீஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமனுருமாவார். அன்னரின் ஈமைக்கிரியைகள் இன்று 08-07-87 புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சங்குவேலி இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு பிப்பிலி மயானத்தில் நடைபெறும்.

[சி-9758]

### சின்னையாபிள்ளை வேலாயுதபிள்ளை

கொழும்பு புறக்கோட்டை பூந்தோட்ட வீதி சின்னையாபிள்ளை அன்ட் சன்ஸ் உரிமையாளரான சின்னையாபிள்ளை வேலாயுதபிள்ளை 7-7-87 காலமானர். இவர் கமலாம்பிகையின் அன்புக் கணவரும், முத்துக்குமாரசாமி, நகுலேஸ்வரி, இரத்தினவேல், செல்வதி ஆகியோரின் அன்புச் சகோதரரும், சொர்ணகாந்தா, திருநாவுக்கரசு, செல்வகாந்தா, திருக்குமார், மகேந்திரன், நிர்மலா ஆகியோரின் அன்புத் தந்தையும், கந்தசாமி (பாந்தன் கெமிக்கல்ஸ்), சந்திரகலா, பஞ்சாட்சரம் (சேவையர்), ஜெயலட்சுமி ஆகியோரின் அன்பு மாமனும், கமலா (யாழ் கச்சேரி), முத்தியாகராசா, கமலா (இந்துமகளிர், சாவகச்சேரி), சண்முகலிங்கம் (மாநகரசபை, கொழும்பு),ஆகியோரின் மைத்துனரும், தானி, திருமால், முரளி, செந்தூரன், நரேந்திரன், மயூரன், அரவிந்தன் ஆகியோரின் அன்புப் பாட்டனும் ஆவர் அன்னரின் ஈமக்கிரியை நாளை 9-7-87 வியாழன் மாலை 2-00 மணியளவில் நடைபெறும்.

தகவல்; வே. திருக்குமார்.
கச்சாய் ரோட்,
சாவகச்சேரி.

(சி-9756)

### திரு. முத்தையா சிவராசா

[அதிபர், வீமன்காமம், மகாவித்தியாலயம்]

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், தெல்லிப்பளையை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. முத்தையா சிவராசா அகால மரணமானர். இவர் வீமன்காமம் மகாவித்தியாயத்தின் அதிபரும், காலஞ்சென்ற முத்தையா, தையல்நாயகி அவர்களின் அன்பு மகனும் இரகிதேவியின் அன்புக் கணவரும், யாதவன், சாயினி ஆகியோரின்அன்புத் தந்தையும், இராசரத்தினம், தயாபரன் ஆகியோரின அன்புச் சகோதரரும் ஆவர் அன்னரின் இறுதிக் கிரியைகள் பள்ளியவத்தை, அளவெட்டி வடக்கு, கும்பிளாவளைப் பிள்ளையார் கோயிலுக்கருகாமையில் 8ம் திகதி புதன்கிழமை பிற்பகல் 1-00மணிக்கு நடைபெறும் மல்லாகம் மகாவித்தியாலயத்தில் அதிபர்கள் ஆசிரியர்கள், மாணவர்கள், பொதுமக்கள் ஆகியோரின் அஞ்சலிக்காக பிற்பகல் 1-30மணிக்கு வைக்கப்பட்டு, 3-00 மணிக்கு அங்கிருந்து அளவெட்டி குடும்ப மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் கொடுப்போர்:
துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன்.
[மைத்துனர்]

[சி-9756]

## மாவிட்டபுரம்பகுதியிலிருந்து ராணுவம் முன்னேற முயற்சி

(மாவிட்டபுரம் நிருபர்)

மாவிட்டபுரம் வீமன்காமம் பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் சிறிது சிறிதாக முன்னேற முயற்சிப்பதாக அறியப்படுகின்றது.

மேற்படி பகுதிகளில் தாம் நிலைகொண்டுள்ள இடங்களிலிருந்து சுற்றுடல் பகுதிகளை கண்காணித்துவரும் இராணுவத்தினர் சில சமயங்களில் முன்னேறவும் முயற்சிக்கின்றனர்.

வீமன்காமம் பகுதியில் இவ்வாறு முன்னேறிய இராணுவத்தை போராளிகள் தாக்கவே அவர்கள்திரும்பிச் சென்றனர்.

## யாழ் குடாநாட்டில் எரிபொருள் விலை குறையும்

யாழ்ப்பாணம், புதன்

யாழ் குடாநாட்டில் அதிகரிக்கப்பட்ட எரிபொருளின் விலையைக் குறைப்பதற்கு பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வடபிராந்திய முகாமையாளர் நடவடிக்கை எடுத்துவருகிறார்.

இதுதொடர்பாக இன்று யாழ் குடாநாட்டில் உள்ளஎரிபொருள் விநியோகஸ்தர்களுடன் முகாமையாளர்ஆலோசனை நடத்துவார்.

போக்குவரத்துநிலைமை தற்போது ஓரளவு சீரடைந்துள்ளமையினுல் 1 லீட்டர் பெற்ரோலின் விலை 19 ரூபா விலிருந்து 17 அல்லது 17 ரூபா 25 சதமாகக் குறைக்கப்படலாம் என்று எதிப்பார்க்கப் படுகிறது. (வா)

## ஷெல் தாக்கி இருவர் காயம்

பலாலி, செவ்

பலாலி இராணுவ முகாமிலிருந்து ஏவிவிடபபட்ட ஷெல் தாக்கியதால் குப்பிளான் பகுதியில் இருவர் படுகாயமடைந்தனர்.

இராசரத்தினம் சௌந்தரம் (வயது 48 ,செல்லப்பா இராசரத்தினம் (வயது 50) ஆகிய இருவருமே படுகாயமடைந்து தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்களாவர். [மா]

## ஆனையிறவில் லொறிகள் தடுத்துவைப்பு

யாழ்ப்பாணம், புதன்

நெல்லியடி இராணுவமுகாம் தாக்குதல் சம்பவத்தையடுத்து கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்த லொறிகள் மீண்டும் ஆனையிறவு தடை முகாமில் பலத்த சோதனைக்குள்ளாக்கப்படுகிறது.

இதேவேளையில் சில லொறிகள் முகாமில் தடுத்துவைக்கப்பட்டுள்ளன.

## அகதிகளுக்கு உதவி

யாழ்ப்பாணம், புதன்

வளலாய், அச்சுவேலிப் பகுதிகளில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின்போது பாதிக்கப்பட்டு அகதிகளாக வெளியேறிய 3 குடும்பத்தைச் சேர்ந்த 36 பேருக்கு, உடுவில் மல்வம் ஞானப்பிரகாசர்சனசமூக நிலையம் ஒருமாதகாலமாகபராமரித்துவருகிறது. [கு]

### உத்தரவுபெற்ற வியாபாரிகளும்
## நிவாரண பொருள்களை இனிமேல் விநியோகிப்பர்
### உதவி உணவுக்கட்டுப்பாட்டதிகாரி நடவடிக்கை

(அலுவலக நிருபர்)

இராணுவ நடவடிக்கைகளினுல் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்தோர்க்கு வழங்கப்படும் அரசநிவாரணப் பொருட்களை அவ்வப்பகுதி உத்தரவு பெற்ற வியாபாரிகளிடமிருந்தும் பெற்றுக்கொள்வதற்கும் யாழ் உதவி உணவுக்கட்டுப்பாட்டதிகாரி திரு. எஸ். பற்குணம் நடவக்கைகளைமேற்கொண்டுள்ளார்.

இதுதொடர்பாக உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரி திரு. எஸ் பற்குணத்தினுல் சகல உதவிஅரசாங்க அதிபர்களுக்கும் சுற்றுநிருபம் ஒன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

அச்சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

உணவுமுத்திரை வைத்திருக்கும் பிரதான குடியிருப்பாளராயிருந்தால் அவர் வழமையாக உணவுப்பொருள்களைப் பெறும் உத்தரவுபெற்ற வியாபாரியிடம் அரச நிவாரணப் பொருள்களைப் பெற்றுக் கொள்ள அனுமதியளிக்க வேண்டும்.

உணவுமுத்திரை இல்லாதவர்களின் விடயத்தில் அவர் உத்தரவுபெற்ற வியாபாரியிடம் இருந்து தனது நிவாரண பொருளைப் பெறவிரும்பினுல் உணவுத்திணைக்களம், ப நோ. கூ. சங்கஇயக்குநர்சபைஆகியவற்றுடன் கலந்தாலோசித்து நடவடிக்கைஎடுக்கவேண்டும்.

இராணுவ நடவடிக்கைகளினுல் இடம் பெயர்ந்தவர்கள் உத்தரவுபெற்ற வியாபாரிகளிடமிருந்தும் நிவாரணப் பொருட்களைப் பெறும்பட்சத்தில் ப. நோ. கூ சங்கக்கிளைகளில் தற்போதுநிலவும்நீண்டகியூ முறையும் காலதாமதமும் தவிர்க்கப்படலாம்எனத் தெரிவிக்கப்படுகிறது. (வா)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1987-ம் ஆண்டு ஜூலை மாதம் 8-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 10036/81 Eelanadu. P. O. Box 49 Telegram, Eelanadu. Telephone, — 22389, 24126.